# திருமலைத்தீபம்
Thirumalaitheepam

எழுந்து ஒளி வீசு

திருகோணமலை மறைமாவட்டத்தின் மாதாந்த பத்திரிகை

சுடர் – 59
விலை ரூபாய் 30.00

தீபம்-59 | ஆனி, ஆடி இதழ் – 2019,
ஆரம்பம் 15 மாசி - 2013

திருமறைக்கல்வி நிலையம்,
இல: 297, கடற்படைத்தள வீதி, திருகோணமலை.

E-mail : catetcota@gmail.com
T.P : 026 2221022, 026 2054362


**நான் வாழும் நாளெல்லாம் ஆண்டவரைப் போற்றிப் பாடுவேன் (தி. பா. 104:33)**

ஆயர்த்துவ திருப்பொழிவு

## பும் ஆண்டு நிறைவு

## 25.07.2019



ஆயரின் பணிவாழ்வு
சிறக்க செபிப்போம்!
வாழ்த்துவோம்

## வாழ்த்துவோம்



எமது மறைமாவட்டத்தில் பல வருடங்களாக பணிபுரிந்து வரும், அமல உதயத்தின் பொறுப்பாளருமாக கடமை ஆற்றிய அருட்பணி. P. J. யோகராஜா (அ.ம.தி) அவர்கள் தமது பணியினை திருகோணமலை மறைமாவட்டத்தில் நிறைவு செய்து மாற்றமாகி புதிய பணித்தளம் நோக்கிச் செல்கிறார்.

இவர் தமது பணியை சிறைச்சாலையிலும், வைத்திய சாலையிலும் ஆற்றியது மட்டுமல்லாது தேவைகளின் நிமித்தம் பங்குத்தளங்களுக்குச் சென்று மனங்கோணாது பணியைச் செய்பவர். இவரது பணி மேலும் சிறந்து விளங்க திருமலைத்தீபம் வாழ்த்தி நிற்கின்றது. அதுமட்டுமல்லாது இவ்வருடம் இவர் தனது குருத்துவ பயணத்தில் "வெள்ளி விழாவையும்" எதிர்கொள்கின்றார் என்பதும் குறிப்பிடத் தக்கது.

## வரவேற்கின்றோம்



மூதூர் மண்ணைப் பிறப்பிடமாகக் கொண்ட முதலாவது அமலமரித் தியாகிகள் சபையைச் சேர்ந்த அருட்பணி. யூஜின் பெனடிக்ற் அவர்கள் தற்போது எமது மறைமாவட்டத்திற்கு தனது பணியை ஆற்றுவதற்கு நியமிக்கப்பட்டுள்ளார். இவர் "அமல உதயத்தின்" பொறுப்பாளராக கடமையைப் பொறுப்பேற்றுள்ளார். இவர் தனது பணியை கடந்த பல வருடங்களாக நுவரெலியா, ஹப்புத்தளை, பதுளை போன்ற இடங்களில் மிகச் சிறப்புடன் ஆற்றியவர் என்பது யாவரும் அறிந்ததே. எமது மறைமாவட்டத்திற்கு அருட்பணியாளர் வருகை தந்தது பெரும் வரப்பிரசாதமாகும்.

இவரின் பணிவாழ்வு சிறப்படையவும். எமது மறைமாவட்டத்தில் சிறப்புடன் தனது பணியை ஆற்றி சிறந்த பங்களிப்பையும் செய்வார் என வரவேற்று வாழ்த்துகின்றோம்.

## இயேசுவோடு 12 மணி நேரம் விசேட நற்கருணை ஆராதனை

**இடம் :** புனித யூதாததேயு ஆலயம்
இலிங்கநகர், உவர்மலை

**காலம் :** 13. 07. 2019
( சனிக்கிழமை)

**நேரம் :** மதியம் 12 மணி முதல்
இரவு 12 மணி வரை



**இடம் :** புனித அந்தோனியார் ஆலயம்
சீனன்குடா

**காலம் :** 03. 08. 2019
( சனிக்கிழமை)

**நேரம் :** மதியம் 12 மணி முதல்
இரவு 12 மணி வரை

**திருகோணமலை மறைமாவட்டத் திருச்சபையாக செபத்தில் இணைந்திடுவோம்.**

## பாலையூற்று புனித லூர்த்து அன்னை திருத்தலத்தின்
# 113வது திருவிழா


புனித லூர்த்து அன்னையின் திருத்தலத்தில் வணக்க மாதத்தை சிறப்பிக்கும் முகமாக வைகாசி மாதம் 1ந் திகதி தொடக்கம் 31ம் திகதி வரை செபமாலையத் தொடர்ந்து திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்பட்டது. 26.05.2019 அன்று காலை 7.00 மணிக்கு திருகோணமலை மறைமாவட்ட ஆயர் அதி. வண. நோயல் இம்மானுவேல் ஆண்டகை அவர்களின் தலைமையில் திருவிழா கூட்டத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது.

இலங்கைத் திருநாட்டில் இடம்பெற்ற அசம்பாவிதங்களுக்கு பின் நடைபெற்ற முதலாவது திருவிழா இதுவாகும். இவ்விழா சிறப்பாக நடைபெற்றது எம் மரியன்னையின் பரிந்துரையும் பாதுகாப்புமாகும். அத்தோடு எம் பங்குத்தந்தை அருட்பணி. க. நிதிதாசன் அவர்களின் அயராத உழைப்பும் உறுதியான நம்பிக்கையும் ஆகும். மரியன்னையின் பக்தர்களின் அர்ப்பணிப்பும், ஈடுபாடும் சிறப்பாக காணப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்விழாவின் இறுதியில் எமக்காக பரிந்தரைக்கும் மரியன்னையின் இனிய நாமத்தினால் கொடி இறக்கப்பட்டு அச்சமின்றி உறுதியுடன் தளராத விசுவாசத்துடன் வாழ ஆசிர் வழங்கப்பட்டது.









தகவல் : அன்டனிதாஸ் சகாயமேரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**என் தலைவரே! நீர் மாட்சிமிக்க அஞ்சுதற்குரிய இறைவன் (தானியேல் 09:04)**

சுயவிழிப்புணர்வுத் தொடர் - 04

# இன்னுமா தயக்கம்!



இறைஇயேசுவில் பிரியமான சகோதர சகோதரிகளே! திருமலை தீபம் இதழ் வாயிலாக மீண்டும் உங்களை சந்திப்பதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். சென்ற இதழில் ஞானம் நிர்பந்தப்படுத்தப்பட்டு வருவதல்ல, அது திறந்த மனதோடு வருகின்ற அனுபவங்களை ஏற்றுக் கொண்டு அவ்வனுபவங்கள் மூலம் பெற்றுக் கொள்வதே நிறை ஞானமாகும். இந்த ஞானம் பற்றிய தேடலே இன்றைய மானுடத்தின் முக்கியமான உந்துதலாக இருக்கின்றது. எனவே ஞானத்தை விரும்பாத மனிதர்களே இல்லை எனலாம். ஆனால், காலப்போக்கில் நம் வாழ்வில் வரும் பல்வேறு விதமான கவலைகள், கலக்கங்கள் வழியாக நாம் இந்த உண்மைத் தேடலை மறந்து தேவையற்ற பல தேடல்களில் நம்மை ஈடுபடுத்திக் கொள்கின்றோம். எனவே ஞானம் ஒரு எட்டாக் கனியாகவே மாறி விடுகின்றது.

இந்த ஞானத்தைக் கண்டு கொள்ள நாம் என்ன செய்ய வேண்டும், என்பது மானுடத்தின் முக்கியமான கேள்வியாக இருக்கின்றது.இந்தக் கட்டுரையில், கடவுளைக் கண்டுகொள்வதில் உள்ள மனித பலவீன தடைகள் சிலவற்றைப் பற்றிப் பார்ப்போம்.

மனிதன் நிம்மதியைத் தேடி அலைந்து கொண்டே இருக்கின்றான். அவனுக்கு நிம்மதி இறைவனில் உண்டு என்ற உள்ளுணர்வு இருப்பதன் காரணமாக இறைவனைத் தேடி வருகின்றான். நிம்மதி இறைவனிடம் தான் உண்டு என்றும் நம்புகின்றான். ஆனால்,நிம்மதிக்காக இறைவனைத் தான் தேடுகிறானா? அல்லது உண்மையான இறைவனைத் தான் கண்டு கொண்டானா,என்றால் அது மிகப் பெரிய கேள்விக்குறிதான். "இறைவனைத் தேடி வருகின்றேன்" என்று சொல்லிக் கொண்டு தனக்குத் தானே ஒரு இறைவனை உருவாக்கிக் கொண்டு அதையே உண்மையென நம்பி அதற்கு வழிபாடு செய்ய ஆரம்பிக்கின்றான். தான் வழிபாடு செய்வது தவறான கடவுள் என்று அவனது உள்மனது சொன்னாலும் உண்மைக் கடவுளை தேட மறுக்கின்றான். இவ்வாறாக உருவாக்கப் படுபவை தான் பணம், பதவி, பட்டம் போன்றவை. இவற்றை ஆதரிக்கும் கடவுள்களை, தானே உருவாக்கி, இந்தக் கடவுளை வழிபட்டால் எனக்கு வாழ்க்கையின் வசதிகள் அனைத்தும் கிடைக்கும் என்று ஒரு மாயையை உருவாக்கிக் கொள்கின்றான். இந்த மாயை, மனிதனை சுற்றி உண்மையை வரவிடாமல் தடுத்துவிடுகின்றது.

இன்றைய கருத்தை கூறுவதற்கு முன் ஒரு சிறுகதையை சொல்ல ஆசைப்படுகின்றேன்.

இப்போதெல்லாம் அருண் பள்ளி முடிந்து தன் வீட்டுக்கு செல்லும் போது மிகவும் மகிழ்ச்சியாக செல்கிறான். காரணம், அவன் வீட்டில் அவனுக்கு மிகவும் பிடித்த அவனது அப்பாவைக் காணப் போகிறோம் என்ற எண்ணம் தான். ரொம்ப நாள் கழித்து அவர் வீட்டுக்கு வந்திருந்தாலும், அம்மாவை விட அப்பாவைத் தான் அவனுக்கு இப்போது மிகவும் பிடித்திருக்கின்றது. காரணம், அவர் அவனை எக்காரணம் கொண்டும் கடிந்து கொள்வதில்லை, எந்த வேலையும் சொல்வதில்லை, என்ன கேள்வி கேட்டாலும் மிகவும் பொறுமையுடன் பதில் சொல்கின்றார், அம்மா பல வேளைகளில் தன் மகனை அதிகமாக கடிந்து கொள்வதுண்டு. ஆனால் அப்பா, கடிந்து கொள்வதே இல்லை. இரவு தூங்கும் முன், பலவிதமான அழகான கதைகள் சொல்கிறார், எல்லா உதவிகளையும் அவரே செய்கிறார். இப்போதெல்லாம் அருண் வீட்டுக்கு வந்தால் அவன் அம்மாவைப் பற்றி நினைப்பதே இல்லை. முழுக்க முழுக்க அப்பா தான் அவனுக்கு எல்லாம். அம்மாவின் சில தோழிகள் இது பற்றி அம்மாவை எச்சரித்திருக்கிறார்கள், ஆனாலும், அவள் இதைக் கண்டு கொள்ளவில்லை.

அப்பா, ஒரு கணிணி பொறியாளர். திருமணம் முடித்த கையோடு தன் மனைவியை சொந்த ஊரில் விட்டுவிட்டு தன் வேலைக்கு வெளியூர் வந்துவிட்டார். அவரது மனைவியும் ஒரு இயந்திரவியல் பொறியாளர். இவருக்கு சிலநாட்கள் கழித்து குழந்தை பிறக்கின்றது. குழந்தையை தந்தை ஒரே ஒருநாள் மட்டும் பார்த்துவிட்டு அதன் பின் பல வருடங்கள் வரவேயில்லை. அவரது வேலையில் ஒரு புதிய கண்டுபிடிப்பை கண்டுபிடிப்பதற்காக அவர் அந்த அளவிற்கு மும்முரமாக ஈடுபட்டிருந்தார். குழந்தை அருண், சிறுவனாக வளர்ந்து விட்டான். இப்போது அப்பாவை அவன் தேட ஆரம்பிக்கின்றான். ஒவ்வொரு நாளும் தன் தாயிடம் அப்பா எப்படி இருப்பார், அவரை நான் எப்போது பார்ப்பேன், என்றெல்லாம் கேள்விகளைக் கேட்டுக் கொண்டே இருப்பான். ஒவ்வொரு நாளும் தந்தையின் புகைப்படத்தை மட்டும் காட்டி தன் மகனை சமாளிக்க முடியாது என்று நினைத்த அந்த இளம் மனைவி தன் கணவனிடம் தொடர்ந்து அவர் எப்போது வருவார், என்று கேட்டுக் கொண்டே இருக்கின்றாள். அவரோ வருவது போலத் தெரியவில்லை. இறுதியாக இந்தப் பெண் ஒரு முடிவிற்கு வருகின்றாள். அன்று தன்னிடம், அப்பா எப்போது வருவார், என்ற கேள்வியைக் கேட்ட தன் மகனிடம், அப்பா இன்னும் ஒரு மாதத்திற்குள் வருவார், அவர் இனிமேல் நம்மோடு தான் இருப்பார், வேறு எங்கும் போக மாட்டார், என்று கூறுகின்றாள். இதைக் கேட்ட அருணுக்கு மிகுந்த மகிழ்ச்சி. சரியாக ஒரு மாதகாலம் கழித்து தான் தேடிக் கொண்டிருந்த தன் தந்தை தன்னை வந்தடைந்ததைக் குறித்து அவன் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. தன் தந்தை மிகவும் நல்லவராக இருந்ததே அதற்கான காரணம்.

இன்று அவன் வழக்கம் போல் வீட்டிற்கு வருகின்றான். தன் தந்தையைக் கண்டு அவரைக் கட்டித் தழுவச் செல்கின்றான். அவர் அருணை அப்போது தான் முதல் முறையாகப் பார்ப்பது போல அவனைப் பார்க்கிறார். ''என் புள்ளையா நீ, எப்படி அழகா வளர்ந்துட்டே" என்று கூறி மகிழ்கின்றார். அவனுக்கு முத்தம் தருகின்றார், அதன் பின் தன் கணிணியில் மும்முரமாக வேலை செய்ய ஆரம்பித்துவிட்டார். இதுவரை கணிணியையே தொடாத தந்தை, தன்னை உதாசீனமே செய்யாத தந்தை, இன்று வித்தியாசமாக இருக்கிறாரே, அவரது தோற்றம், நடைஉடை பாவனை அனைத்துமே வித்தியாசமாக இருக்கின்றதே, பார்வையில் ஒரு மிடுக்கு, ஆணவம், அலட்சியம் அப்பாவை அவன் முதன் முறையாக ஏமாற்றத்துடன் பார்க்கின்றான். மீண்டும் அப்பாவைக் கட்டிப் பிடித்துக் கொண்டு,''வா அப்பா, விளையாடலாம்", என அழைக்கின்றான். அப்பா, "எனக்கு வேலை இருக்கில்லப்பா, தொந்தரவு செய்யாம போய் விளையாடு" என்று கூறுகின்றார். இந்த அலட்சியம் அப்பாவிடமிருந்து முதன் முறையாக வருவதைப் பார்கின்றான். அவனுக்கு மிகப் பெரிய ஏமாற்றம். அழுது கொண்டே அவன் வீட்டை விட்டு வெளியே வருகின்றான். "இது எங்கப்பா இல்ல" இது எங்கப்பா இல்ல'', என்ற வார்த்தைகள் மட்டும் அவனது வாயிலிருந்து சப்தமின்றி வந்து கொண்டிருந்தன.

அந்த நேரம், அப்பாவுக்கும் அம்மாவுக்கும் பெரிய சண்டை ஆரம்பிப்பதைப் பார்த்துக் கொண்டு இன்னும் அழுகின்றான். கொஞ்ச நேரத்தில் அப்பாவின் சண்டை வலுக்கின்றது. அக்கம் பக்கத்திலிருந்து உறவினர்கள், நண்பர்கள் எல்லோரும் வந்துவிடுகின்றார்கள். அம்மா கூனிக்குறுகி நிற்கின்றாள். அப்பா அங்கு வந்த அனைவரிடமும், ''இவள் எனக்கு உண்மையாக இல்லை. ஒரு நடத்தை கெட்டவள், நான் ஊரிலில்லாத சமயம், இவள் தன் மகனுக்கு வேறொருவரை அழைத்து வந்து தன் அப்பா எனக் காட்டியிருக்கிறாள். நான் இல்லாத நேரத்தில் என் வீட்டில் யார் இருந்தார்கள் என எனக்கு இப்போது தெரிய வேண்டும்.. என கூச்சலிடுகின்றார். அம்மா, தன்னை மிகவும் இழிவாகப் பார்த்துக் கொண்டிருக்கும் மக்களை கூச்சத்துடன் பார்த்துவிட்டு தன் கணவனை வீட்டிற்குள் இழுத்துச் செல்கின்றார். சிறிது நேரத்தில் அப்பா வீட்டுக்கு வெளியேவந்து அங்கு நின்றிருந்த அனைத்து மக்களையும் செல்லுமாறு விரட்டிவிட்டுவிட்டு அமைதியாக வீட்டுக்குள் செல்கின்றார். குழப்பத்தில் நின்றிருந்த அருண் வேகமாக வீட்டுக்குள் செல்ல, அங்கு இன்னொரு அப்பா அமைதியாக நின்று கொண்டிருக்கின்றார். அவர் தான் இதுவரை தன்னை மிகவும் செல்லமாகப் பார்த்துக் கொண்டிருந்த அப்பா என்பதை உணர்ந்த அருண், வேகமாக சென்று அப்பா என்று கட்டிப் பிடிக்கின்றான். அவரே தன் உண்மையான அப்பா என்று மகிழ்கின்றான். புதிதாக வந்த அப்பா மலைத்துப் போய் நிற்க, அம்மா சொல்கின்றாள், "அருண்! அது உன் அப்பா இல்லை, அது உன் அப்பாவைப் போன்ற உருவம் கொண்ட ஒரு பொம்மை. கணிணி உதவியால் இயங்கும் பொம்மை. அது உன்னைக் கவனித்துக் கொள்ளும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. அது கதை சொல்லும், உனக்குள்ள உதவிகளையெல்லாம் செய்யும், உன்னை நன்றாகக் கவனித்துக் கொள்ளும். ஆனால், அது ஒரு பொம்மை. நீ கேட்கும் கேள்விகளைப் புரிந்து கொள்ளும் ஆற்றல் படைத்த கணிணி கொண்ட ஒரு பொம்மை!''

அதிர்ச்சியடைந்த அருண், ''அப்படியானால், என் உண்மையான அப்பா, பொம்மை அப்பாவை விட மோசமானவரா, எனக்கு பிடித்தது போன்று என் பொம்மை அப்பா தான் இருப்பாரா? என் உண்மை அப்பா, எனக்குப் பிடித்தது போல் இருக்கமாட்டாரா? அப்படியானால், எனக்கு இந்த பொம்மை அப்பாவே போதும், மற்ற அப்பா எனக்குத் தேவையில்லை".. என்று அழ ஆரம்பிக்கின்றான்.


அன்பார்ந்தவர்களே! இன்று நாமும் அருணைப் போல பொம்மைகளை வைத்துக் கொண்டு உண்மையை இடமாற்றம் செய்ய முயல்கிறோம். அது உண்மையில்லை என்று தெரிந்திருந்தும் அதனை ஏற்றுக் கொள்ள மறுக்கின்றோம். காரணம், உண்மை நாம் எதிர்பார்ப்பது போல இல்லை. எதார்த்தம் எப்போதும் நாம் நினைப்பது போல இருப்பதில்லை.

நாம் வைத்துள்ள பொம்மைகளிலேயே முதன்மையான பொம்மை,கடவுள் பொம்மை. கடவுளை நமமால்உண்மையாக உணர முடியவில்லை என்பதால், உண்மைக் கடவுளைப் போல பொம்மைக் கடவுளை உருவாக்கி, அதை உண்மை என்று எண்ணி வழிபடுகின்றோம். அந்த பொம்மைக் கடவுள், நாம் கேட்பதை எல்லாம் தரவேண்டும், நம்மைக் கடிந்து கொள்ளவே கூடாது, நம் தேவையையெல்லாம் பூர்த்தி செய்ய வேண்டும், என்று பல எதிர்பார்ப்புக்களை முன்வைத்து ஒரு கடவுளை நமக்கு நாமே உருவாக்கி அதையே வழிபடுகின்றோம். உண்மையான கடவுளே நம் முன்னிலையில் வந்தாலும், இவர் உண்மையான கடவுள் இல்லை, நான் உருவாக்கிய பொம்மைக் கடவுள் தான் உண்மை, அவர் தான் எனக்கு வேண்டும், என்று புலம்புகிறோம். எதார்த்தத்தில் வாழ முடியாத நாம், இன்றைய எதார்த்தத்தை மாற்றவல்ல கடவுளை உருவாக்குகின்றோம். எனவே தான்,இன்றளவும் நாம் கடவுளிடம் சென்று, இறைவா! எனக்கு அதைத் தா, இதைத் தா, எனக்கு அது சரியில்லை, எனக்கு இது சரியில்லை, என் வாழ்க்கையை புதிதாக, நல்லதாக மாற்றித் தா! என்றுதான் கேட்டுக் கொண்டிருக்கின்றோம். இதற்குக் காரணம் என்ன?கடவுள் நம்மை சரியாக படைக்க வில்லையா, அல்லது கடவுள் நம் வாழ்விற்குக் கொடுத்த வளங்கள் அனைத்தும் வீணானதா, அல்லது அருளையெல்லாம் தன்னிடம் மட்டும் வைத்துக் கொண்டு இறைவன் நம்மைக் கெஞ்ச விட்டு வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறாரா? நிச்சயமான மேற்கண்ட சிந்தனைகள் உண்மையல்ல. ஆனால், நம் வேண்டுதல்களை சற்று உற்று நோக்கினால் இவை அனைத்தையும் உண்மையென நாம் நம்பிக்கொண்டு இருக்கின்றோம் என்பதைக் கண்டு கொள்ளலாம். பழைய ஏற்பாட்டில், ''ஆண்டவரிடம் கண்ணீர் சிந்திக் கேட்டால் தான் அவர் நமக்குஇரங்குவார், உடலை வருத்திக் கொண்டால் தான் நம்மைப் பார்ப்பார், உரக்கக் கத்திக் கூப்பிட்டால் தான் நமக்குச் செவிமடுப்பார்'', என்று இறைவாக்கினர் எலியா பாகால் இறைவாக்கினர்களைப் பார்த்து கேலியாக கேட்கிறார். ''இன்னும் உரக்கக் கத்துங்கள், உங்கள் உடலை கத்தியால் கிழித்துக் கொள்ளுங்கள், அவர் பயணம் போயிருக்கலாம், எனவே இன்னும் உரக்கக் கத்துங்கள்'', என்று அவர்களைக் கேலி செய்கின்றார். ஆனால், இப்படிப்பட்ட இறைநம்பிக்கையைத் தான் இன்றளவும் நாம் கொண்டிருக்கின்றோம் என்பது சற்று வேதனையாகத் தான் இருக்கின்றது.

தொடர்ச்சி 04ம் பக்கத்தில் ..........

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டு வாழ்வு





ஒரு கல்லூரி நன்னெறி வகுப்பு.
'சார்...
கூட்டு வாழ்வு சிறக்க
நாங்கள் என்ன செய்ய வேண்டும்...?'
கேட்டு நின்ற இளையோர் குழுவிடம் சொன்னார் லசாக் ஆசான்:
செயல் முறையில் விளக்குகின்றேன். கூர்ந்து கவனியுங்கள்.
நான்கு கண்ணாடி டம்ளர்களை சுத்தமான நீரால் நிரப்பினார்.
முதல் டம்ளரில்...
ஒரு கல்லைப் போட்டார்.
- கல் நீரோடு ஒட்டவில்லை.
ஆனால் நீருக்குள்ளே அசைவற்றுக் கிடந்தது.
ஆசான் விளக்கினார்:
'பார்த்தீர்களா...!
நீருக்குள்தான் கல் இருக்கிறது. ஆனால் நீரோடு ஒட்டவில்லை.
இதே போல் சமுதாயத்தில் வாழும் பலர்
யாரோடும் ஒட்டாமல் வாழ்வார்கள்.
தனிமைவாதிகள்.'
இரண்டாம் டம்ளரில்...
ஒரு பஞ்சைப் போட்டார்.
போட்ட வேகத்தில் நீரைக் குடித்து விட்டு மதமதவென்று மிதந்து திரிந்தது:
'பார்த்தீர்களா...
இதே போல் தான் சமுதாயத்தில் பலர், கிடைக்கும் எல்லா சலு-கைகளையும் அனுபவித்துவிட்டு மதமதவென்று திரிவார்கள். சுயநலவாதிகள்.'
மூன்றாவது டம்ளரில்...
ஒரு களிமண் உருண்டையைப் போட்டார்.
போட்டவுடன் உடைந்து சுத்தமான நீர் நாசமாகிக் கலங்கடித்தது.
'பார்த்தீர்களா...
இதேபோல் தானும் கெட்டு நாறி, சமுதாயத்தையும் நாறடித்துக் கொண்டிருப்பார்கள் பலர். நாறவாய் - நச்சுக்கிருமிகள்.'
நான்காவது டம்ளரில்...
ஒரு கரண்டி சீனியைப் போட்டார்.
கொஞ்சம் கொஞ்சமாக நீரோடு நீராகி தன்னையே இழந்து காணாமல் போனது:
'சுவைத்துப் பாருங்கள்...
இனிமையான சுவை.
சுவைத்தனர்.
பார்த்தீர்களா...
இதேபோல் சிலர் கூட்டு வாழ்வில் தானும் இனித்து பிறரையும் இனிமையாக்குவர்.
இனிய கிரியா ஊக்கிகள்.'
வகுப்பை நிறைவு செய்தார் ஆசான்:
'இளையோரே,
நீங்கள் சமுதாயத்தில் எப்படி இருக்க விரும்புகிறீர்கள்?
கல்லாகவா? பஞ்சாகவா? களிமண்ணாகவா? சீனியாகவா?'

நீ நாறினால்
சுற்றியுள்ள சமூகமும் நாறும்.
நீ இனித்தால்
சுற்றியுள்ள சமூகமும் இனிக்கும்.



# பதிப்பாசிரியர் பகிர்வு



**அருட்பணியாளர். T. கிங்ஸ்லி றொபட்**

மனித வரலாற்றில் பல்வேறு காலக்கட்டங்களில் ஒருசில நிகழ்வுகள் காலத்தால் அழியாத காவியங்களாகவோ அன்றேல் மறக்கவே முடியாத அவலங்களாகவோ நடந்தேறுவது கண்கூடு. உதாரணமாக '9/11' என்றவுடனேயே அமெரிக்க வரலாற்றிலே நியூயோர்க் நகர இரட்டைக் கோபுரம் தகர்க்கப்பட்ட கோர நிகழ்வு ஞாபகத்திற்கு வரும். 'ஜீலை 1983' என்றவுடன் கறுப்பு ஜீலை என்று நம் நாட்டில் நடந்தேறிய இனக்கலவரத்தின் உச்சக் கட்ட நினைவு மேலோங்கி நிற்கும். 'மே 18' என்றவுடன் முள்ளிவாய்க்கால் அகோர நினைவலைகள் மனக்கண்முன் எழுந்து நிற்கும். இந்தப் பட்டியலுக்கு இன்னுமோர் சேர்க்கையாக '21/4' - உயிர்ப்பு ஞாயிறு குண்டுத் தாக்குதல்களும் அதன்வழி ஏற்பட்ட கோரக் கொலைகளும் நெஞ்சை உருக்கும் நிகழ்வுகளாக நடந்தேறியுள்ளன. 'இதயச் சுமைகளை இறக்கி வைக்க ஆலயத்திற்கு வந்தால் அது உயிரையே காவு கொடுக்கும் அவலத்தை ஏற்படுத்துகின்ற அளவுக்கு மாறி இருக்கின்றதே' என்று அங்கலாய்த்த ஒரு முதியவரின் ஓலம் மனதை உருக்கியது.

இஸ்ரயேல் மக்கள் மிதியானியரிடம் ஏழு ஆண்டுகள் அடிமைகளாக கொடுமைப்படுத்தப்பட்ட போது அவர்களை விடுவிக்க ஆண்டவரிடம் கூக்குரல் இட்டபோது, அவர் அவர்களுக்கு இறைவாக்கினர் ஒருவரை அனுப்பினார்.... ஆண்டவரின தூதர் யோவாசின் மகன் கிதியோனுக்குத் தோன்றி, 'வலிமை மிக்க வீரனே! ஆண்டவர் உன்னோடு இருக்கிறார்' என்றார். கிதியோன் அவரிடம் 'என் தலைவரே! ஆண்டவர் எம்மோடு இருக்கிறார் என்றால் ஏன் இவையெல்லாம் எமக்கு நேரிடுகின்றன? ஆண்டவர் எம்மை எகிப்து நாட்டிலிருந்து வெளியே கொண்டுவரவில்லையா என்று கூறி, எங்கள் தந்தையர் எமக்கு வியந்துரைத்த அவரது வியத்தகு செயல்களெல்லாம் எங்கே? இப்பொழுது ஏன் ஆண்டவர் எம்மை இப்படிக் கைவிட்டுவிட்டார்?' என்றார். மன விரக்தி நிறைந்த இவ்வாறான வார்த்தைகளையும், மனக் குமுறல்களையும், வெறுப்பு நிறைந்த மனப்பக்குவத்தையும் நிறையவே இந்நாட்களில் கேட்டிருக்கின்றோம் அல்லது எமது மனதை உலுப்பும் காட்சிகளாகப் பார்த்திருக்கின்றோம்.

ஆனி மாதம் என்றாலே இருதய ஆண்டவரின் நினைவு மேலோங்கி இருப்பதை நாம் அவதானிக்கின்றோம். இயேசுவின் திரு இருதயத்திற்கு மனுக்குலத்தை, நம் நாட்டை, நம் குடும்பங்களை அர்ப்பணித்து அடைக்கலம் தேட வாய்ப்புக்களைப் பயன்படுத்திக்கொள்வோம். தொடர்ந்தும் நம் நாட்டில் பாதுகாப்பான சூழல் உருவாகவும், நிலையான அமைதி ஏற்படவும், சந்தேகக் கண்கொண்டு ஒருவரை மற்றவர் பார்க்கும் இழிநிலைகள் மாறி, சமூக உறவுநிலை மலரவும் இலங்கை அன்னையிடம் பரிந்துரைப்போம். நாளுக்கு நாள் சீரழிந்து வரும் அரசியல் தலைவர்களின் நடவடிக்கைகளும், உள்ளங்களைக் காயப்படுத்தி மற்றவர்மேல் பழிபோடும் கடைநிலை அரசியல் பிரசுரங்கள் மற்றும் மேடைப் பேச்சுகள் போன்றவை அழிந்தொழியவும், ஒவ்வொரு நிகழ்வுகளையும் நாளாந்தம் கண்டு வாழக்கையை கேள்விக்குறியாக மாறிவிடுமோ என்ற பயத்தோடும் பீதியோடும் வாழும் சாமான்ய மனிதரின் வாழ்வு ஒளியேற்றம் பெறவும் அன்றாடம் செபிப்போம். எம்மைச் சுற்றியுள்ளவர்களோடு அன்பாக, பண்பாக வாழப் பழகுவோம். வாழ்க வளமுடன்.

# ஆடி 2019 மறைமாவட்ட நிகழ்வுகள்

| | |
|---|---|
| 02.07.2019 | செவ்வாய்க்கிழமை : குருக்களுக்கான மாதாந்தத் தியானம். |
| 06.07.2019 | சனிக்கிழமை: புனித யோசே வாஸ் சிறிய குருமட விழா. |
| 07.07.2019 | ஞாயிற்றுக்கிழமை: பொதுக்காலம் 14ம் ஞாயிறு. |
| | : பன்குளம் - புனித அந்தோனியார் ஆலயத் திருவிழா |
| 12.07.2019 | வெள்ளிக்கிழமை |
| | : 12 மணி நேர நற்கருணை ஆராதனை - இலிங்கநகர் ஆலயம் (உவர்மலைப் பங்கு). |
| | : குடும்ப அப்போஸ்தலம் - திருமண முன் ஆயத்தக் கருத்தரங்கு. |
| 13.07.2019 | சனிக்கிழமை: குடும்ப அப்போஸ்தலம் - திருமண முன் ஆயத்தக் கருத்தரங்கு. |
| | : கி. வா. சமூகம் - மாதாந்த நற்கருணை ஆராதனை. |
| 14.07.2019 | ஞாயிற்றுக்கிழமை: பொதுக்காலம் 15ம் ஞாயிறு. |
| | : புல்மோட்டை வீரன்தீவு மடுமாதா ஆலய வருடாந்தத் திருவிழா. |
| | : கந்தளாய் - பேராறு திரு இருதய ஆண்டவர் ஆலய வருடாந்தத் திருவிழா. |
| 16.07.2019 | செவ்வாய்க்கிழமை : புனித வின்சன்ட் டி பவுல் ஆலோசனை சபை - மாதாந்தக் கூட்டம். |
| 20.07.2019 | சனிக்கிழமை: கி. வா. சமூக பொது ஒன்றுகூடல். |
| 21.07.2019 | ஞாயிற்றுக்கிழமை: பொதுக்காலம் 16ம் ஞாயிறு. |
| | : அலஸ்தோட்டம் - வரோதயநகர் மடுமாதா ஆலய வருடாந்தத் திருவிழா. |
| 27.07.2019 | சனிக்கிழமை: வெல்வேரி புனித யாகப்பர் ஆலய விழா - மறைமாவட்ட வருடாந்த ஒன்றுகூடல். |
| 28.07.2019 | ஞாயிற்றுக்கிழமை: பொதுக்காலம் 17ம் ஞாயிறு. |
| | : சுதேச குருக்கள் - துறவியர் தினம். |
| | : சலப்பையாறு சிந்தாத்திரை மாதா ஆலய வருடாந்தத் திருவிழா. |
| | : கத். இளைஞர் ஒன்றிய கூட்டம். |
| 31.05.2019 | புதன்கிழமை: புனித லொயோலா இஞ்ஞாசியார் - மறைமாவட்ட பாதுகாவலரின் பெருவிழா. |

## சிந்தனைக்கு ..................

உன் மீது
உனக்கே
நம்பிக்கை
இல்லை
என்றால்.
கடவுளே நேரில்
வந்தாலும்
பயனில்லை...
--விவேகானந்தர்

முதல் தெய்வம் - பெற்றோர்
மிகமிக நல்ல நாள் - இன்று
மிகப்பெரிய வெகுமதி - மன்னிப்பு
மிகவும் வேண்டாதது - வெறுப்பு
மிகப்பெரிய தேவை - புத்திசாலித்தனம்
மிகக்கொடிய நோய் - பேராசை
மிகவும் சுலபமானது - குற்றம் காணல்
மிகவும் கீழ்த்தரமானது - பொறாமை
நம்பக்கூடாதது - வதந்தி
ஆபத்தை விளைவிப்பது - அதிகப்பேச்சு
செய்யக்கூடாதது - துரோகம்
செய்யவேண்டியது - உதவி
விலக்கவேண்டியது - வீண் விவாதம்
உயர்வுக்கு வழி - உழைப்பு
நழுவவிடக் கூடாதது - வாய்ப்பு
பிரியக் கூடாதது - நட்பு
*மறக்கக் கூடாதது - நன்றி



மூடன்!
கடவுளை
முதியோர் இல்லத்தில்
விட்டு விட்டு.
ஆலயங்கள் தோறும்
தேடல்!

ஒரு மனிதனின்
உண்மையான தன்மையை
அறிய விரும்பினால்,
அவனுக்கு அதிகாரத்தைக்
கொடுத்துப் பாருங்கள்



இறக்கத்தான் பிறந்தோம்
அதுவரை இரக்கத்தோடு இருப்போம்

வெறுப்பது யாராக இருந்தாலும்
நேசிப்பது நீங்களாக இருங்கள்.

உன் மீது அன்பு செலுத்துகிறவர்களை நேசி,
உன்மீது கோபம் கொள்பவர்களை
அதைவிட அதிகமாக நேசி
- அன்னைத்தெரேசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 02ம் பக்கத் தொடர்ச்சி ........... இன்னுமா தயக்கம்

முப்பொழுதும் அன்பு மயமாய் நிறைந்துள்ள இறைவனை, பிறர் துன்பப்படும் போது மகிழும் இறைவனாக மாற்றி அதையே சரி என்றும் நம்பிக் கொண்டிருக்கின்றோம். நாம் உருவாக்கி வைத்துள்ள கடவுள் இத்தகைய கடவுளாக இருப்பதாலேயே நமது கண்ணீர், துன்பம் ஆகியவற்றை நாம் உயர் பக்தி என்று நினைத்துக் கொண்டிருக்கின்றோம். உண்மையில் இறைவன் நம்மைத் துன்பப்படுத்திப் பார்க்க விரும்பவே இல்லை. அவர், எப்போதும் நாம் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்றே விரும்புகிறார்.

ஆனால், நாம், நம் கடவுள் இப்படி இருப்பதையே விரும்புகின்றோம். நம்மிடம், நாம் வருத்திக் கொள்ளும் நோன்பையும், பிரார்த்தனைகளையும் மட்டும் ஏற்றுக் கொண்டு, நம் வாழ்வு எப்படி இருந்தாலும் நம்மை கடிந்து கொள்ளாத நல்ல இறைவன் தான் நமக்கு வேண்டும். நாம் நம் கடமைகளைச் செய்யாமல் தவறி அதன் மூலம் நாம் உருவாக்கிக் கொள்ளும் தீமைகளையெல்லாம் தன் வல்லமையான கரத்தால் அழித்து ஒழிக்க வேண்டும். இவ்வாறான கடவுளையே நாம் நமக்கு உருவாக்கி வைத்திருக்கின்றோம். இதுவே சரி, இதுவே உண்மை, இதையே நான் ஏற்றுக் கொள்வேன் என்று வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இந்த சூழ்நிலையில் உண்மையான கடவுள் நம் முன்னிலையில் வந்தாலும் நாம் அவரை ஏற்றுக் கொள்ள முடியாமல் தவிக்கின்றோம்.

இதனை நாம் மிகவும் தெளிவாக யூதர்களின் வாழ்வில் பார்க்கலாம். பல நூற்றாண்டுகளாக மெசியாவுக்காக காத்திருக்கின்றார்கள். இறுதியாக மெசியாக இயேசுவின் வடிவில் வருகின்றார், ஆனால், அவரை அவர்களால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. அவரை வெறுத்தார்கள். எந்த அளவிற்கு அவரை வெறுத்தார்கள் என்றால், அவரை சிலுவையில் அறைந்து கொல்லும் அளவிற்கு அவரை வெறுத்தார்கள். இதுவே இன்று நம் நிலையுமாகும்.

இன்று நாம் நம் நிலையை சற்று சீர்தூக்கி அறிந்து கொள்வோம். உண்மையான இறைவனைத்தான் நாம் வழிபடுகின்றோமா, அல்லது நாம் உருவாக்கிய பொம்மைக் கடவுளை வழிபடுகின்றோமா?உண்மைக் கடவுளை வழிபட வேண்டுமென்றால் நாம் நம் வாழ்வை முதலில் செவ்வைப் படுத்த வேண்டும். பெரும்பாலும் நம் வாழ்வின் நிகழ்வுகளை நம் கையில் உள்ள சட்டப்புத்தகமான விவிலியத்தைக் கொண்டு சரி என்று நிரூபிக்க முயல்கின்றோமே தவிர, நம் மனச்சாட்சியின் படி வாழ்ந்திருக்கின்றோமா, என பார்க்கத் தவறிவிடுகின்றோம். எனவே பல வேளைகளில் விவிலியம் நமக்கு ஒரு சட்டப்புத்தகமாக மட்டுமே நின்றுவிடுகின்றது. அப்புத்தகத்திலிருந்து ஆன்மீகத்தைக் கற்றுக் கொள்ள தவறிவிடுகின்றோம். விவிலியத்தையும் கூட நம் சுயநல நோக்கத்துடன் படித்தால், அது ஒரு சட்டப்புத்தகமாக, நம் செயல்பாடுகளை நியாயப்படுத்துகின்ற புத்தகமாகவே இருக்குமே தவிர, அதிலிருந்து உண்மையான ஆன்மீகத்தைப் பெற முடியாது. எனவே விவிலியத்தைப் படிக்கவும் நமக்கு நேரிய மனப்பான்மை வேண்டும். உண்மையான மனச்சாட்சியின் உதவி கொண்டு உண்மையை உணர்ந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வத்தோடு படிக்க வேண்டும்.

நேரிய உள்ளத்தோடு இறைவனைத் தேடி இறைவனை அறிந்து கொள்ள உங்களை வாழ்த்தி,மீண்டும் இந்த அனுபவங்களைப் பற்றிய புதிய தேடல்களுடன் உங்களை அடுத்த இதழில் சந்திக்கும் வரை நன்றிகூறி விடைபெறுகின்றோம். நன்றி.

இறையாசீருடன் அருட்பணி. அலெக்ஸ். க.ச

ஜாய் குட்டீஸ்



## திருவிவிலிய புதிர் போட்டி எண் : 39
## நெகேமியா 1-6 அதிகாரங்கள்

1.நெகேமியா யாருக்கு பான பணிவிடைக்காரராக இருந்தார்?
விடை :......................................................................................................
......................................................................................................

2.எருசலேம் மதில்களுக்கும், வாயிற்கதவுகளுக்கும் நடந்தது என்ன?
விடை :......................................................................................................

3.தோபியாவுக்கு மடல்கள் அனுப்பியது யார்?
விடை :......................................................................................................

4. மன்னர் நெகேமியாவுக்கு மடல் கொடுக்கக் காரணம் யாது?
விடை :......................................................................................................
......................................................................................................

5.நெகேமியா மன்னருக்கு திராட்சை இரசம் கொடுக்கும் பொழுது மன்னர் அவரைப் பார்த்து கூறியது என்ன?
விடை :......................................................................................................

6.நாற்பது செக்கேல் வெள்ளியுடன் எதனை வசூலித்தனர்?
விடை :......................................................................................................

7."குப்பை மேட்டு வாயில்" வரை எத்தனை முழம் மதிலைப் பழுது பார்த்தனர்?
விடை :......................................................................................................

8.மதில் கட்டுவோரும், சுமை சுமப்பவரும் யாது செய்தனர்?
விடை :......................................................................................................

9.நீங்கள் நேர்மையற்றவர்களாக இருப்பீர்களேயாகில் உங்களை.......................... வசனத்தை பூர்த்தி செய்க?
விடை :......................................................................................................

10. நெகேமியா பாரசீக மன்னரால் எந்த நாட்டுக்கு என்னவாக நியமனம் பெற்றார்?
விடை :......................................................................................................

பெயர் :......................................................................................
தரம் :......................................................................................
முகவரி :......................................................................................
பங்கு :......................................................................................

முடிவுத்திகதி : 05. 08. 2019

## திரு இருதய ஆண்டவரின் திருநாள்



திருஅவை இந்த மாதம் 28ம் திகதி இயேசு ஆண்டவரின் திரு இருதய திருநாளைக் கொண்டாடுகின்றது. இந்த கொண்டாட்டம் கிறிஸ்தவர்களாகிய நமக்கு ஒரு முக்கிய திருநாளாகும். ஏனென்றால் மனித இருதயம் ஒரு விசேட அவயவமாகும். மனித இதயம் தான் மனித உடலில், உயிரில் விலை மதிக்க முடியாத சேவையை ஆற்றுகின்றது. இதயம் நின்றுவிட்டால் உயிர் போய் விடும். ஆகவே இதயம் மனித வாழ்வில் முக்கிய இடத்தை வகிக்கின்றது. இதயம் மனித அன்பிற்கு பெரிய ஒரு அடையாளமாகும். இளம் வாலிப இளைஞர்கள் தங்கள் அன்பிற்கு அடையாளமாக பாவிப்பது இதயமாகும். இரு இதயங்கள் ஒன்றாக இணைத்து அதன்மேல் அம்பை கீறி இளைஞர்கள் தங்கள் அன்பை வெளிப்படுத்துவார்கள். இன்றைய சமுதாயத்தில் இந்த அன்பை காதலாக எடுத்துக் கொள்கிறார்கள். கணவன். மனைவியிடையே ஏற்படுவது தான் உண்மையான காதல் என்று எடுத்துக் கொள்ளலாம்.

இக்கருத்துக்களை சொல்வதற்கெல்லாம் காரணம் இயேசு ஆண்டவரின் அன்பு அவருடைய இதயத்தின் மூலமாகவே காட்டப்படுகின்றது. இதைப் பற்றி புனித மார்கரீத் மரியாளுக்கு காட்சி கொடுத்து பின்வருமாறு கூறினார்..........

அவர் இவ்வாறு அந்த புனிதைக்கு கூறியது, அவரது அன்பை வெளிப்படுத்தவே அவர் பட்ட எல்லாத் துன்பங்களுக்கும் அவர் மனிதன் மேல் எவ்வளவு அன்பு வைத்திருக்கிறார் என்று காட்டவே அவருடைய சிலுவை மரணத்தின்பின் அவருடைய இதயம் ஈட்டியால் குத்தப்பட்டு இரத்தமும் தண்ணீரும் ஓடியது என்று வேத வாக்கியம் சொல்லுகின்றது. இயேசு ஆண்டவருடைய மாறாத அன்பு. அவர் மனிதரின் முகத்தைப் பார்த்து அன்பு செய்யவில்லை. மாறாக உள்ளத்தைப் பார்த்தே அன்பு செய்கிறார். அவர் பாவத்தை வெறுக்கிறார். ஆனால் பாவியை அன்பு செய்கிறார். இயேசு ஆண்டவரின் திருஇருதயத்தின் மாறாத இந்த அன்புக்கு நாம் என்ன செய்ய வேண்டும். பிரதி அன்பு காட்ட வேண்டும். அவரது மாறாத அன்பை நாங்கள் எங்கள் வாழ்விலேயே விளங்கிக் கொள்ள முயற்சிக்க வேண்டும். அதேவேளை அவர் அன்பு செய்தது நாம் இவ்வுலகத்திற்கு முதலே எங்களை நினைத்து அன்பு செய்துள்ளார்.

ஆகவே அவரது அன்புக்கு பிரதி அன்பு காட்டுவது எப்படி என்று நாம் சிந்தித்து செயல்பட வேண்டும். நாம் பிறருக்கு உண்மையான அன்பு காட்டும்போது இயேசுவின் திருஇருதயத்தின் அன்பை பிரதிபலிக்கின்றோம். பணம், பட்டம், பதவி, பாமரர், ஏழைகள் என்று பாராது யாவரையும் அன்பு இறைவன் படைத்துக் காத்து அன்பு செய்கிறார் என்று நினைத்து பிறரை அன்பு செய்ய வேண்டும். நாம் எம்மிடம் வருகிற ஏழைகளுக்கு உதவி செய்யும்போதே நாம் இயேசுவை அன்பு செய்கிறோம் என்பது சாட்சியமாகும். இவ்வாறு வாழ இருதய ஆண்டவரிடம் ஆசி வேண்டி நிற்போம்.

அருட்சகோ. எலிசபெத்
கரித்தாஸ் கன்னியர்மடம்
நிலாவெளி

## கத்தோலிக்க மறைப்பாடசாலை இறுதிச் சான்றிதழ் தேர்வு - 2019

கத்தோலிக்க மறைப் பாடசாலை இறுதிச் சான்றிதழ் பரீட்சையானது, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2019 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் இதற்கென அமைக்கப்படும் பரீட்சை நிலையங்களில் நடாத்தப்படவுள்ளதாக 2019, வைகாசி மாதம் 31ம் திகதிக்கான வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது. இத்தேர்வுக்கான விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய இறுதி நாள் 28 - 06 - 2019 ஆகும்.

கத்தோலிக்க மறைப்பாடசாலை இறுதி தேர்வில் தோற்றுவதற்கு பங்கு மாணவர்களை அறிவுறுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன். பங்குத்தந்தை, தனது பங்கின் கத்தோலிக்க மறைப்பாடசாலை இறுதி சான்றிதழ் தேர்வுக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளினது மறைப்பாடசாலையின் தலைமையானவராக இருப்பதால் இத்தேர்வில் தோற்றுவதற்கு விண்ணப்பதாரரை ஊக்கப்படுத்தும் பொறுப்பு அவரை சார்ந்ததாக உள்ளது. ஆகவே பரீட்சைக்குத் தோற்றுமாறு மாணவர்களை ஊக்கப்படுத்தவும். விண்ணப்பப்பத்திரம் இதுவரை கிடைக்காத பங்குகளில், மறைப்பாடசாலையின் பெயர், முகவரி, விண்ணப்பதாரரின் எண்ணிக்கை ஆகியவை பங்குக் குருவினால் குறிப்பிடப்பட்டு பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு (நிறுவனம் மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை), இலங்கை பரீட்சைத் திணைக்களம், த.பெ.இல. 1503, கொழும்பு என்ற முகவரிக்கு 14-06-2019 க்கு முன் அனுப்பப்பட வேண்டும். மேலதிக விபரங்களுக்கு 31-05-2019 வர்த்தமானியைப் பார்க்கவும்.

நன்றி
அருட்தந்தை பியல் ஜானக்க பர்னாந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லூக்கா நற்செய்தியில் பெண்கள்

எந்தச் சமூகத்தில் பெண்கள் எல்லா அடிமைத் தளைகளிலிருந்தும் விடுதலை பெறுகின்றார்களோ அந்தச் சமூகம்தான் விடுதலை அடைந்த சமூகமாகும். விடுதலை அடைந்த சமூகத்தில் அன்பு, அமைதி, சமத்துவம், சகோதரத்துவம் இருக்கும். அங்குதான் இறையாட்சி மலரும்.

லூக்கா தன் நற்செய்தியில் இறையாட்சி மலர பெண்களின் விடுதலை அவசியம் என்னும் கருத்தை மையப்படுத்தியுள்ளார். "பெண்களின் நற்செய்தி" என்று கூறும் அளவிற்கு இந்நற்செய்தியில் பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. ஆண்களுக்குப் பெண்கள் நிகரானவர்கள், மாண்பும் மதிப்பும் கொண்டவர்கள் எனக் காட்டுகிறார் லூக்கா.

## மாந்தர்கெல்லாம் மாதிரி

விடுதலை பெற்ற பெண் இனத்தின் முன்னோடியாக அன்னை மரியா காட்டப்படுகின்றார். அவர் இறைவனின் பணியை இயேசுவுக்கு முன் துவங்கியுள்ளார் வானதூதர் வாழ்த்துக்கூறி மீட்பரின் தாயாகச் சம்மதத்தைக் கேட்டு கடவுள் காத்திருப்பதாக விவிலியம் காட்டுகிறது. கடவுளின் திருவுளம் என்றறிந்ததும் ஐயோ திருமணத்திற்கு முன்பு கருவானாள் என்று உலகம் சொல்லுமே, கல்லால் எறிந்து கொல்லுமே என்றெல்லாம் அவர் கலங்கவில்லை. அம்மா அப்பாவைக் கேட்க வேண்டுமே என்றெல்லாம் அவர தயங்கவில்லை. இத்தகைய சூழ்நிலையை அறிந்தும் "ஆகட்டும்" என்று தன்னுரிமையுடன் தீர்மானிக்கின்றார்.

இயேசுவை உடலளவில் தாங்கியதால் மட்டும் அன்னையாகாமல் இறை வார்த்தையைக் கேட்டு அதன்படி வாழ்ந்த காரணத்தினாலும் அன்னை மரியா சிறந்த தாயாகவும், சீடராகவும் ஆகின்றார் (லூக் 11:27-28).

நற்செய்தியிலேயே முதல் விடுதலை நாயகியாகவும், மாந்தர் அனைவரும் அவ்விடுதலை பெற உழைக்க முனைபவராகவும் அன்னை மரியா காட்டப்படுகின்றார். அவரது பாடல் இதற்குச் சான்றாக அமைகிறது (1:46-55):

1.கடவுள், "தம் தோள் வலிமையைக் காட்டினார்" உள்ளத்தில் செருக்குடன் சிந்திப்போரைச் சிதறடித்தார்.
2.வலியோரை அரியணையினின்று தூக்கி எறிந்தார், தாழ் நிலையில் இருப்போரை உயர்த்தினார்.
3.பசித்தோரை நலன்களால் நிரப்பினார், செல்வரை வெறுங்கையராய் அனுப்பினார..

இப்படி அன்னை மரி யூத சமூகத்தில் ஏழை எளியவரையும், பெண்களையும் அடக்கும் அடிமைத் தளைகளாகிய சமய, அரசியல். பொருளாதார நிலைகளிலிருந்து விடுதலை பெறவேண்டும் என்று வீர முழக்கம் இட்டார்.

## ஆண், பெண் சமத்துவம்

பெண் ஆண்களுக்குச் சரி நிகரானவர்கள் என்பதை லூக்கா தனது நற்செய்தியின் அமைப்பு முறையிலும் செயல்களின் வழியும் விளக்கியுள்ளார்,

## ஆண்களும் பெண்களும் இணைந்து வருதல்

லூக்கா தனது நற்செய்தி முழுவதிலும் ஆண்களுக்குக் கொடுத்துள்ள அதே முக்கியத்துவத்தைப் பெண்களுக்கும் கொடுத்துள்ளார். ஏறக்குறைய எல்லா அதிகாரத்திலும் ஒரு ஆணைப் பற்றி விளக்கியபின் அவருக்கு நிகராகப் பெண்ணும் அதே நிலையில் உயர்ந்தவர், சிறந்தவர் எனக் காட்டப்படுகின்றார். இது தொடக்க நூலில் (1:27-28) இறைவன் ஆணையும் பெண்ணையும் தம் சாயலாகவும் பாவனையாகவும் படைத்தார். தம் மாண்பையும் வல்லமையையும் அவர்களுக்கு முடியாகச் சூட்டினார் என்னும் கூற்றைத் தொடர்ந்து மெய்ப்பிப்பதாக அமைகிறது.

லூக்கா நற்செய்தியில் ஆண்களும் பெண்களும் இணைந்தே வருகின்றனர். மரியா-சூசை, எலிசபெத்து-சக்கரியா, அன்னா-சிமியோன், சரப்தா ஊர்க் கைம்பெண்-சீரியா நாட்டு நாமான், கைம்பெண்ணின் மகன் குணமாதல்-நூற்றுவர் தலைவரின் ஊழியன் குணமாதல், இயேசுவின் பல பெண் சீடர்கள்-பன்னிரு சீடர்கள், மார்த்தா, மரியா-நல்ல சமாரியர், காணாமற்போன நாணயத்தைத் தேடும் பெண்-ஆட்டைத் தேடும் ஆயன், விடாமல் தொந்தரவு செய்யும் கைம்பெண்-ஜெபிக்கும் இருவர், இயேசுவைப் பின்சென்ற எருசலேம் நகர்ப் பெண்டிர்-சீரேன் ஊரைச் சேர்ந்த சீமோன்.

## பெண்களே சிறந்த சீடர்கள்

பெண்-ஆண்களின் சமத்துவத்தை வலியுறுத்துவதோடு லூக்கா பெண்களே சிறந்தவர்கள் எனவும் காட்டுகின்றார். அன்னை மரியா மாதிரியாகக் காட்டப்படுகின்றார். சீடர்கள் இயேசுவோடு வாழ்ந்த போது தமக்கு என்ன இலாபம் கிடைக்கும் என்ற நோக்கமாக இருந்தனர். அதனால் தங்களுள் யார் பெரியவர் (லூக் 9:46-48), வலப்பக்கமும் இடப்பக்கமும் அமர்வது யார் என்ற போட்டி இருந்தது. மாறாக, பெண்கள் தங்களது உடைமைகளை விற்று இயேசுவுக்கும் சீடருக்கும் பணிபுரிந்து பின்சென்றனர். இயேசு பிடிபட்டபோது தங்களுக்கும் இந்த நிலை ஏற்பட்டுவிடுமோ எனப் பயந்து ஆண் சீடர்கள் சிதறி ஓடிப்போயினர். ஆனால், பெண் சீடர்கள் கலிலேயா தொடங்கி எருசலேம் வரையும், உயிர்ப்புக்குப் பின்னும் அவரைப் பின்சென்றனர்.

நல்ல சமாரியரின் செயல்பாட்டைப் போற்றி லூக்கா, இலாசரின் சகோதரி மரியாவையும் போற்றுகின்றார். மார்த்தா, மரியாவுடன் நடத்தும் உரையாடலில் மரியா நல்ல பங்கைத் தேர்ந்துகொண்டார் என்று போற்றி, செபமும் செயற்பாடும் இணைந்து இருப்பதைச் சுட்டிக்காட்டுகின்றார் (லூக் 10:42).

சீரேன் ஊரினராகிய சீமோன் அதிகாரிகளின் கட்டாயத்தினால் இயேசுவின் சிலுவையைச் சுமக்கின்றார் (லூக் 23:26). மாறாக எருசலேம் நகரப் பெண்கள் தாங்களாகவே மனமுவந்து இயேசுவைக் கடைசிவரைப் பின்செல்கின்றனர் (லூக் 23:29).



யூதப் போதகர்கள் பெண்களைச் சீடர்களாக ஒருபொழுதும் ஏற்றுக்கொள்வதில்லை. ஒரு பெண் தன் வீட்டைத் துறந்து ஒரு போதகரோடு செல்வது கேள்விப்பட்டிராத ஒன்று. இயேசுவோ தன் காலடியில் அமர்ந்து பாடம் கேட்கும் சீடர்களாக மட்டுமன்று (லூக் 10:39), தம்மோடு ஊர் ஊராய்ப் பயணம் மேற்கொண்டு பணி மேற்கொள்ளும் உடனுழைப்பாளர்களாகவும் பெண்களைத் தேர்ந்துகொண்டார் (லூக் 8:1-3). சீடருக்குரிய முக்கிய பண்புகளாக உடன் இருத்தலையும், பணி புரிதலையும் லூக்கா குறிப்பிடுகின்றார் (லூக்10:39-40). எனவே பெண்கள் பன்னிரு சீடர்களைப் போன்று, ஏன் அவர்களைவிடச் சிறந்த சீடர்களாக விளங்கினார்கள் என நற்செய்தியாளர் காட்டுகின்றார்.

## பெண் உருவகங்கள் வழி வீடுதலை

இயேசு போதித்த உவமைகளில் பெண்களைக் கொண்டு யூத சமூகத்திற்கு விடுதலைக் கூறுகளை விளக்குகின்றார்.

இறைத் தந்தையின் விடுதலைக் கூறுகள்

காணாமற்போன பணத்தைத் தேடியலையும் பெண் வழி (லூக் 15:8-10), பாவிகளைத் தேடியலையும் தந்தையைச் சுட்டிக் காட்டுகின்றார். யூத சமூகத்தில் பாவிகளாகக் கருதப்பட்டு மாண்பும் மதிப்பும், மனிதத்தன்மையும் இழந்தவர்கள் பெண்கள், ஏழைகள், புறவினத்தவர்கள். எகிப்தில் துன்புற்ற இஸ்ரயேல் மக்களின் அழுகுரலைக் கேட்டு விடுவிக்க முன்வந்த தந்தையின் பண்பை இவ்வுவமை சுட்டிக் காட்டுகின்றது (விப 3:7-8). இத்தகைய பாவிகள் மாண்பும் மதிப்பும் பெறும்போதுதான் கண்டுபிடிக்கப்பட்ட பணத்தைக் கண்டு அக்களிக்கும் பெண்ணைப் போன்று தந்தையும் மகிழ்வதாகக் காட்டுகின்றார் (லூக் 15:8-10).

## அநீதி சமூகத்திற்குச் சவால்

பொல்லாத நடுவனிடம் நீதி கேட்கும் கைம்பெண் யாருமற்றவராக இருந்திருக்க வேண்டும். அதனால்தான் இவர் இடைவிடாத வேண்டுதலை எழுப்புகின்றார். நடுவருக்குப் பெண்மணியின் தொந்தரவே நீதி வழங்க உதவும் கருவியாக அமைந்தது என லூக்கா விளக்குகின்றார். சமூத்தில் பல்வேறு அடிமைத்தனங்களினால் அழுக்கப்பட்டு கடைநிலைக்குத தள்ளப்படும் ஏழை, எளியவர், புற இனத்தவர் குறிப்பாக பெண்கள் இடைவிடாது தொடர்ந்து போராடினால்தான் விடுதலை பெறமுடியும். இதனால் நீதியான சமூகம் அமைக்க முடியும் என்பதை இக்கைம்பெண் வழி விளக்குகின்றார்.

## அடிமைப்படுத்தும் சட்டங்களிலிருந்து வீடுதலை

யூத சமூகத்தில் பெண்கள் இரண்டாம் தரமாகக் கருதப்பட்டு வந்தனர். பெண்களை சமூக, சமய, பொருளாதார, அரசியல், கலாச்சார நிலைகளில் அடிமைப்படுத்த எண்ணற்ற சட்டங்கள் இருந்தன. லூக்கா நற்செய்தியாளர் பெண்களை இத்தகைய சட்டங்களிலிருந்து விடுவிப்பவராக இயேசுவைக் காட்டுகின்றார்.

## பெண்களும் சான்று பகரலாம்

யூத சமூகத்தில் பெண்கள் பொய்யர்கள் எனக் கருதப்பட்டதால் அவர்கள் நீதி மன்றத்திலும் மற்ற இடங்களிலும் சாட்சி சொல்ல முடியாது. அப்படிச் சொன்னாலும் அச்சாட்சி ஒரு பொருட்டாகக் கருதப்படாது. இந்தச் சூழ்நிலையில் இரு பெண்கள் இயேசுவின் முக்கிய வாழ்க்கை நிகழ்ச்சியில் சாட்சியளிக்கின்றனர். குழந்தை இயேசுவை மெசியா என சிமியோன் சாட்சியளித்ததோடு அன்னாவும் சாட்சியளித்து பல மக்களுக்கு அவரே மெசியா எனக் கூறுகிறார் (லூக் 2:38). இயேசு உயிர்த்ததை வானதூதர் வழி அறிந்து பன்னிருவருக்கும் மற்ற சீடருக்கும் பெண்கள்தான் அறிவித்தனர். இவ்வாறு பெண்கள் உயிர்ப்பின் சாட்சிகளாயினர் (லூக் 24:9-10).

## தூய்மை – தீட்டுச் சட்டம் தூக்கி எறியப்படல்

"மாதவிடாய் சமயத்தில் அந்தப் பெண் ஒரு நாள் விலக்கமாய் இருப்பாள். அவளைத் தொட்டவன் யாராயினும் மாலை வரை தீட்டுப்பட்டவனாயிருப்பான்" (லேவி 15:19-24) என்பது இலேவியராகமச் சட்டம். இதனால் பன்னிரு ஆண்டுகளாகப் பெரும்பாட்டினால் வருந்திய பெண், மௌனமாய் ஆடையைத் தொட்டு குணமாகிச் சென்றுவிட நினைத்தார். ஆனால் இயேசு அந்தக் கூட்டம் முழுவதற்கும் அவர் தன்னை தொட்டதாக அறிவிக்கச் செய்கின்றார். இவ்வாறு பெண்களை அடிமைப்படுத்தும் சட்டத்தை எல்லோருக்கும் முன் தூக்கி எறிகின்றார். உன் விடுதலைக்குக் காரணம் உன் நம்பிக்கையே என்று உணர்த்த, "உன் நம்பிக்கை உன்னைக் குணமாக்கியது" என்று கூறி அப்பெண்ணைத் தன்னம்பிக்கையில் வளரச் செய்கின்றார் (லூக் 8:48).

இயேசு தம் ஒரே மகனை இழந்து தவிக்கும் கைம்பெண்ணின் அழுகுரலைக் கேட்டு மனமிரங்கினார். இறந்த உடலையோ பாடையையோ தொட்டால் தீட்டு எனக்கூறும் சட்டத்தைத் தூக்கி எறிந்து இறந்த இளைஞனைத் தொட்டுக் குணமாக்குகின்றார் (லூக் 7:11-17).

தொடரும்...........

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருஅவையும் இணையமும்





இன்றைய நவீன மனிதனின் அன்றாட வாழ்வில் இணையம் (Internet) அவசியமானதொன்றாக மாறிவிட்டது. குழந்தைகள் விளையாடுவதற்கு இணையம் வேண்டும், மாணவர்கள் கல்வி கற்கவும் இணையம் வேண்டும், இளைஞர்களின் பொழுது போக்கிற்கும் இணையம் வேண்டும், இவற்றைத் தவிர அலுவலகங்கள் மற்றும் ஏனைய இடங்களில் வேலைகளை செய்யவும் இணையம் வேண்டும், முதியோர்கள் தங்களின் பொழுதைக் கழிக்கவும் இணையம் வேண்டும், சமையல் செய்யவும், பொருட்களை வாங்கவும் விற்கவும் இணையம் தேவை, செய்திகள் அனுப்பவும் பெறவும் இணையம் வேண்டும். இவ்வாறு பட்டியலிட்டுக் கொண்டே செல்லலாம். படுக்கையிலிருந்து எழும்போது மின்குமிழை ஒளிரச் செய்கிறோமோ இல்லையோ இணையத்தை இயக்க மறந்து விடாமல் இல்லை. இதுதான் இன்றைய நிலைமை. காலை எழுந்ததிலிருந்து உறங்கும் வரை செய்பவற்றை இணையத்தில் பரப்பும் வேடிக்கையும் இன்றைய காலப்பகுதியின் பரிதாப நிலையாக மாறிவிட்டது. இவ்வாறு இருக்கும் போது இணையத்தை திருஅவையிலிருந்து எவ்வாறு பிரித்துவிட முடியும்.

இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் மறுமலர்ச்சியின் பின் திருஅவை இன்றைய தொலைதொடர்பு சாதனங்கள் மற்றும் இணையத்தின் அவசியத்தை உணர்ந்துள்ளது. எனினும் இவற்றை கண்மூடித்தனமாக திருஅவை ஏற்றுக் கொள்ளவில்லை. இவற்றால் ஏற்படும் விபரீதங்களை அறிந்த வண்ணமே திருஅவை இன்றைய உலகில் செயற்படுகின்றது. மனிதர்களின் ஆன்மாக்களை மீட்கும் பொருட்டு நவீன சாதனங்கள் பயன்படுமானால் அவை நன்மைக்குரியவையே. இவற்றை பற்றி இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடு "வியப்புக்குரிய பல" (Inter Mirifica ) தெளிவுபடுத்துகின்றது. எனவே என்னுடைய இந்தக் கட்டுரையின் நோக்கம், திருஅவையில் இணையத்தின் தாக்கங்கள் என்னவென ஆராய்வதே.

### சந்தர்ப்பங்களும் எதிர்ப்புக்களும்

திருஅவையில் தகவல் பரிமாற்றம் கிறிஸ்து இயேசுவின் நற்செய்தியை முதன்மையாகவும் மையமாகவும் கொண்டது. அந் நற்செய்தி மீட்பளிக்கும் இறைவாக்கின் நற்செய்தியாக உலகில் திகழ்கிறது. இதன் மூலம் சமூகத்தில் பல்வேறு நிலைகளில் உள்ளவர்கள் தமக்கேற்றவாறு மீட்பளிக்கும் இறைவாக்காக நற்செய்தியை ஏற்றுக் கொள்கின்றனர். ஆதிமுதல் நற்செய்தி ஊடகத்தின் மூலம் பரப்பப்பட்டது. அவ்வூடகம் வாய்மொழியாகவோ, நூல்களாகவோ, செயல்களாகவோ இருந்தன. ஆனால் நவீன கண்டுபிடிப்புக்களின் பின் ஊடகம் இலத்திரனியல் ஊடகமாக பரிணாமம் பெற்றது. எவ்வகையாயினும் நற்செய்தி பரப்புதலுக்கு ஓர் ஊடகம் அவசியம். எப்பொழுது இணைத்தின் பயன்பாடு மக்களிடையே அதிகரித்ததோ அன்றிலிருந்து நற்செய்தி பறைசாற்றுவதில் இணையத்தின் பயன்பாடும் திருஅவையில் அதிகரித்தது.

இன்றைய இலத்திரனியல் ஊடகங்கள் நற்செய்தியைப் பரப்பினாலும் இணையத்தின் மூலம் இப்பணியானது அதிதுரிதமான முறையில் சமயம் தொடர்பான விடயங்களை அணுகக்கூடியதாக உள்ளது. அதாவது, ஆன்மீகம் தொடர்பான வளங்களை இலகுவாக அணுகக்கூடியதாக உள்ளது. மிகச் சிறந்த கிறிஸ்தவ நூல்கள், கிறிஸ்தவ நூதன சாலைகள், கிறிஸ்தவ வழிபாட்டு ஸ்தலங்கள், திருஅவையின் படிப்பினைகளும், அங்கீகரிக்கப்பட்ட சுருவேடுகளும் அறிக்கை தொகுப்புக்களும் மற்றும் புனிதர்களின் நூல்களும். ஆவணங்களும் கிறிஸ்தவ படிப்பினையைத் தெரிவிக்கும் வளங்களாகும். இணையத்தின் மூலம் அதிதுரித முறையில் தகவல்களை அறியவும் திருஅவையின் இன்றைய நிலை பற்றி தெரிந்து கொள்ளவும் ஏதுவாக உள்ளது. இவற்றைத் தவிர இணையம் நற்செய்தி பரப்புதலுக்கும் மறைக்கல்விக்கும். ஆன்மீக வழிகாட்டுதலுக்கும் பயன்படுகின்றது. இவ்வகை வளங்கள் எம் புலன்களினால் உணரமுடியாமல் போனாலும் எம் ஆன்மீகத்தினை நெறிப்படுத்தும் உந்து சக்தியாகவும், விசுவாசத்தின் வித்துக்களாகவும் திகழ்கின்றன. இவ் இணையத்தினை மிகவும் அதிகமாக பயன்படுத்தும் இளைஞர், யுவதிகள் இதன் மூலம் அதிகளவில் பயன்பெறுகின்றனர். சிலவேளைகளில் ஆலயங்களில் இருந்து வெகு தொலைவில் இருப்பவர்கள் கூட இவ்வகை இணையத் தகவல் பரிமாற்றம் மூலம் மறைக்கல்வியை கற்றுக் கொள்ளக் கூடியதாக உள்ளது. எனவே, இவ் ஊடகத்தினை திருஅவை மக்களுடன் நெருங்கிய தொடர்புடைய ஊடகமாக ஏற்றுக் கொண்டுள்ளது.

இணையத்தகவல் பரிமாறுதலில் உள்ள ஒரு பாரிய விழுக்காடு என்னவெனில் தம் தாய் மொழிகளில் ஆவணங்கள், செய்திகளை அறிந்து கொள்ள முடியாத நிலையே. ஏனெனில் மிக அதிகளவான விடயங்கள் ஆங்கிலம், இலத்தீன், இத்தாலி மொழி ஆகியவற்றில் வெளிவருவதனால் சாதாரண மக்கள் இவற்றை பயன்படுத்துவதில் ஒரு விழுக்காடு உள்ளது. குறிப்பாக தமிழ் மொழியில் புத்தகங்கள் வெளிவந்த போதிலும் இணையத்தில் தமிழ் மொழியில் ஆவணங்கள். ஆன்மீக வளங்கள் வெளியாகுவதற்கு சில கால இடைவெளி காணப்படுகின்றது. இது ஒரு விதத்தில் பிரதிகூலமாகவே உள்ளது.

மேலும் இன்றைய காலத்தில் உள்ள கொடூரமான கவலையான விடயம் என்னவெனில் எந்தவொரு விடயமானாலும் சமூக வலைத்தளங்களில் பரப்புவது வழக்கமாக மாறியுள்ளது. நல்ல விடயங்களை பரப்ப வேண்டுமே ஒழிய தவறான, சமூக சீர்கேடுகளை தூண்டும் விடயங்களை பரப்புவதை தவிர்க்க வேண்டும். இதனை திருச்சபை சட்டம் 212 இவ்வாறு கூறுகின்றது...........

தொடரும்........

அருட்சகோ. பே. எமர்சன் றாகல்
இறையியல் பீடம்
கண்டி தேசிய குருமடம்

# நாம் காணும் வழிகள்

அருட்பணி. N.C. அருள்வரதன்

நமக்கெனப் பலவழிகள்
நிறையஉண்டு
எவ்வழியைத் தேர்ந்து நாம்
வாழமுனைகின்றோம்

இறைவன் காட்டிய
வழிகள் பலவாம்
எதை நாம் தேர்ந்து
வாழ்கின்றோமோ

உலகப் பார்வையின்
வழிகள் பலவாம்
அவற்றில் பலவும்
நம்மைப் பாவங்களில்
வீழ்த்திவிடுகின்றதே



இறைவன் காட்டிய
பாதைகளோ
ஒடுக்கமான பாதைகளாம்
கல்லும் முள்ளும்
நிறைந்தவைகள்
கடந்தால் நமக்கு
நன்மைகள் தருமே

துணிவோம் மனதில்
இறைவனை நினைந்தே
துணிந்து நடந்து நாம் செல்ல
வெற்றியே நமக்கு
விளைவாகும் இதை
மறவாமல் நாமும்
மனங்களில் பதித்தே
நல்லவை திகழத் தொடர்வோமே

# குட்டிக்கதை

**Fr. NC**

நாட்டிலே வெடித்து விட்ட கலவரம் சந்தையிலே குண்டொன்றை வெடிக்க வைத்து விட்டார்கள். பல உயிர்கள் காவுகொள்ளப்பட்டன. உறவுகளை இழந்தவர்கள் தாங்க முடியா வேதனைகளோடு அழுது ஆர்ப்பரித்துக் கொண்டிருந்தார்கள்.

அங்கு நின்ற ஒருவர் அவரும் குண்டை வைத்திருந்தவர். இழப்புக்களால் அழுது ஒப்பாரி வைத்து ஓலங்களைக் கண்ணுற்ற அவருக்குள் திடீரென ஒருமாற்றம்.

தனது குண்டை செயலிழக்க வைத்து விட்டு அருகில் நின்ற இராணுவத்திடம் சரணடைகின்றார். இராணுவத்துக்கு ஆச்சர்யமாக இருந்தது.

மாற்றங்கள் தேவைதான். அதுவும் உண்மையான மனமாற்றம் வாழ்வை வளமாக்குவது உண்மையல்லவா.

# மனம் மாறி மன்னிப்பு கேட்பாயா ?

ஒரு கவிதையின் கனிகளாய் நாம் உதித்தோம்
ஒரு கணம் சிந்திப்பாயா சகோதரனே
ஆபிரகாம் என்பவரே நம் தந்தை
ஆயினும் உமக்குள் ஏன் இந்த இரத்தவெறி
ஆபேலின் இரத்தம் பேசியதால்
காயின் பழிவாங்கப்பட்டான் - ஆயினும்
கர்த்தரின் கனிவானமன்னிப்பு
மறுவாழ்வு கொடுத்ததினால் மனம்மாறினான் காயின் - அன்று
இரத்தப் பழிவாங்கும் பகைவனே
பரிசுத்தவான்களாய் உயிர் பலியான மக்களின்
பரிசுத்த இரத்தம் இயேசுவிடம் பேசும்போது
அரக்கத்தனம் கொண்ட உன் நிலை என்னவாகும்
அழிக்கும் அரக்கனான யூதாசாய் நீ இருந்தால்
அருவருப்பார் ஆண்டவரும் உன்னை - என்றும்
அறிந்தே நீ செய்த பாவமிது
மறுவாழ்வு நீ வாழ மன்னன் இயேசுவிடம்
மன்னிப்புக் கேட்டுவிடு
மன்னிப்பதில் வள்ளல் அவர்
மறுவாழ்வுதந்திடுவார்
தொன்னிற்றொன்பது நீதிமானை விட
பாவியான நீ மனம்மாறும் போதே
விண்ணகத்தில் மகிழ்ச்சியடா - இதை
நீயும் உணர்ந்துகொண்டு மனம்மாறி மனிதனாய் வாழ்ந்துவிடு
தீச்செயலை களைந்துவிடு மிருகத்தனத்திற்காய் மரித்துவிடு
உள்ளங்களை நேசிக்கும் உன்னதர் உடனிருக்க
உயிர் பலிகள் இனியும் வேண்டாமே
உறவுகளை மதித்து நட உயிர்களை நேசிக்கக் கற்றுக்கொள்
உண்மையோடு உன் மனதை உன்னதரில் கொடுத்துவிடு
கிடைத்துவிடும் மறுவாழ்வு உனக்கு - என்றும்
இதற்காய் மனம் மாறி மன்னிப்புக் கேட்பாயா
நீதியை நிலைநாட்ட உன் பாவம் ஏற்பாயா



சு. கௌசல்யா
இல - 216/12, சுடரொளி ஒழுங்கை,
பாலையூற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மனித நேயம் மரித்து விட்டதா?

கருணை என்ற சொல்லுக்கே
களங்கம் இப்போ எம்மிடையே
உள்ளத்தில் இல்லை - இந்த
உண்மையான மனிதநேயம்

எம் தாய்திருநாட்டிலே - எமக்கு
நாய்க்குள்ள மதிப்பில்லை
ஏனென்றால் நம்மிடையே மானிடர்
என்று யாருமில்லை
நல்ல மானிடப் பண்பும் எமக்கில்லை

இனவாத வேட்கையோடு - இன்று
வேட்டையாடும் வெறிநாய்கள்
நாட்டமதிலே அகப்பட்ட
நம் மானிட நேயங்கள்

மனிதனது கொடூரத்தால்
உலகமே தன் அச்சிலிருந்து
மாறிவிட்டது - என்றாய்
மானிடப் பண்பென்பது மாறுவது
மட்டும் என்ன விதிவிலக்கா?
அநியாய அக்கிரமங்களால் இன்று
அன்பான எத்தனை உறவுகள்
புனித நாளில் கல்லறைக்கு
காணிக்கையாக்கி விட்டன
கலங்குகின்றதே எம் இதயம்

மனித மாண்பு மரித்துவிட்டதா?
மனிதர்களும் 'மானுடம்' என்ற
மரியாதையும் மறைந்துவிட்டதா?

இங்கே :
பிறிஜட் சுரேந்திரா

## எகெட் கரித்தாஸ் பணியகத்தினூடாக சேகரிக்கப்பட்ட 2019 ஆம் ஆண்டிற்கான தவக்கால ஒறுத்தல் சேமிப்பு விபரம்.

| பங்களிப்புச் செய்தோர் | தொகை |
|---|---|
| 01. புனித மரியாள் பேராலயம் | 46,964.00 |
| 02. இறை இரக்கத் திருத்தலம் - அலஸ்தோட்டம் | 24,912.00 |
| 03. குழந்தை இயேசு ஆலயம் - உவர்மலை | 24,275.00 |
| 04. புனித குவாடலூப்பே அன்னை திருத்தலம் | 22,300.00 |
| 05. புனித திருமுழுக்கு யோவான் ஆலயம் - சாம்பல்தீவு | 20,100.00 |
| 06. புனித லூர்து அன்னை திருத்தலம் - பாலையூற்று | 20,090.00 |
| 07. புனித செபமாலை மாதா ஆலயம் - குச்சவெளி | 18,900.00 |
| 08. திருஇருதய நாதர் ஆலயம் - இருதயபுரம் | 13,799.00 |
| 09. புனித சூசையப்பர் ஆலயம் - நிலாவெளி | 11,200.00 |
| 10. புனித சதா சகாய மாதா ஆலயம் - கந்தளாவ | 10,460.00 |
| 11. புனித அந்தோனியார் ஆலயம் - மூதூர் | 5,200.00 |
| 12. அன்புக் கன்னியர் இல்லம் - நிலாவெளி | 5,000.00 |
| 13. புனித வேளாங்கண்ணி மாதா ஆலயம் - ஆண்டான்குளம் | 4,600.00 |
| 14. தூய சம்மனசுகள் கன்னியர் இல்லம் - உப்புவெளி | 3,000.00 |
| 15. கிறீஸ்து அரசர் ஆலயம் - கன்னியா | 2,760.00 |
| 16. புனித வனத்து அந்தோனியார் ஆலயம் - செல்வநாயகபுரம் | 2,540.00 |
| 17. புனித அந்தோனியார் பாடசாலை - மூதூர் | 1,980.00 |
| 18. புனித பிரான்சிஸ் சவேரியார் பாடசாலை | 960.00 |
| மொத்தம் | 239,040.00 |

முகாமைத்துவம்
எகெட் கரித்தாஸ்
திருகோணமலை.

## அன்றாட வாழ்வில் தத்துவங்கள்



### 05. உழைப்பு

உழைப்பு என்பது வேலையாகும். கடினமாக உழைத்தால் வாழ்வில் உயர முடியும். உழைப்பு இருவகைப்படும். உடல்சார்ந்த உழைப்பு. அறிவுசார்ந்த உழைப்பு எனக் கூறலாம்.

மனித உழைப்பால் இன்று உலகமே முன்னேறுகிறது. உயிர்கள் வாழ்கின்றன. மகிழ்ச்சி கிடைக்கின்றது. உயர்வு கிடைக்கின்றது. குணப்பண்பு பெருகுகின்றது. அதாவது உழைப்பை தெய்வமாகக் கருதுபவர்களிடம் நேர்மை, தியாகம், பணிவு, நாணயம், சிக்கனம், அஞ்சாமை, கொல்லாமை, சான்றாண்மை, வெகுளாமை போன்ற பண்புகள் உருவாகின்றன. உழைப்பினால் ஊதியம் கிடைக்கின்றது. உடலும், உள்ளமும் வளர்கின்றது.

சோம்பல் என்பது உழைப்புக்கு எதிரியாகும். இளமையிற் சோம்பல் முதுமையிற் துன்பம் என்பது பழமொழி. சோம்பல் சோர்வையும் தளர்வையும் ஏற்படுத்துகிறது. ஆர்வத்தை இழக்கச் செய்கிறது.

ஆனால் உழைப்பு ஒருவனது உடல்நலத்தையும், வாழ்வையும் வளர்க்கிறது. சோம்பேறி தன் ஆசைகளால் வருத்தப்படுகிறான். ஆனால் சுறுசுறுப்புள்ளவனோ ஆசைகளுக்கு அணை போட்டு அயராது உழைப்பதன் மூலம் தேவைகளை நிறைவேற்றிக் கொள்கிறான்.

சோம்பேறிக்கு வறுமையே வருகிறது. ஆனால் உழைப்பவனுக்குச் செல்வம் சேருகிறது. எனக்குள் உழைக்கும் திறனை வளர்க்க வேண்டுமானால் சில நல்ல கருத்துக்களைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

திட்டம் தீட்ட வேண்டும். அட்டவணை தயாரித்து முதலில் எதைச் செய்வது, இரண்டாவது எதைச் செய்வது என்று தரம் பிரிக்க வேண்டும். செய்ய முடியாத திட்டத்தை தீட்டாமல் விடுவது நன்று.

அடுத்தது ஓய்வெடுக்க வேண்டும். ஓய்வெடுக்காதிருந்தால் உடல் பாதிக்கப்படலாம். அப்போது ஞாபக சக்தி குறையத் தொடங்கும்.

அதேபோன்று கடந்த காலத்தையும் எதிர்காலத்தையும் நினைத்துக் கலக்கம் கொள்ளக் கூடாது. இந்தக் காரியத்தைச் செய்ய முடியும் என்ற நல்லெண்ணத்தை உருவாக்க முடியும்.

மேலும் உறுதி கொள்ள வேண்டும். தோல்விகள் தவறுகளை ஏற்றுக் கொண்டு மீண்டும் முயல வேண்டும். இனிமேல் அப்படிப்பட்ட தவறுகளைச் செய்ய மாட்டேன் என்று உறுதி கொள்ள வேண்டும்.

ஒப்பிட்டுப் பார்த்து, ஆராய்ந்து பார்த்து, மனதை ஒருமுகப்படுத்திச் செயலில் இறங்க வேண்டும்.

இறுதியாக விடாமுயற்சி முக்கியமானதாகும். முடிந்தால் முடியாதது ஒன்றுமில்லை என்பதை மனதில் பதிக்க வேண்டும்.

இவ்வாறு அன்றாடம் வாழ்ந்தால் வாழ்வில் முன்னேற முடியும் என்பதில் ஐயமில்லை.



### சிந்தனைக்கு.......

- ஒவ்வொரு நிமிடமும் உனக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் வேலையும், நேரமும் கடவுளிடமிருந்து வருவதாக நினை, உன் வாழ்வில் சலிப்பு ஏற்படாது.
- அறிவில்லாத மூட சனங்கள் சோம்பலில் காலங் கழிக்கின்றனர். அறிவாளிகள் விழிப்பாயிருத்தலையே பெரிய தனமாகப் பாதுகாப்பர்.




## அனைத்து தந்தையர்களுக்கும் தந்தையர் தின வாழ்த்துக்கள்

❖ அன்பை உள்ளே வைத்துக் கொண்டு எதிரியைப் போல் திரியும் ஒரே உறவு அப்பா.

❖ மழைத்துளிகள் வேயாத குடிசைக்குள் விழுந்தால் குடையெனப் பெரும் இலையாய் கரங்கள் தாங்கிட குளிரிலும் உடையென உன் தேகம் பற்றி உயிர்கள் தூங்கிட விழி மூடாமல் சுழலும் அன்பின் நிலா அப்பா.

❖ தான் பார்த்ததை விட அதிகம் தன் பிள்ளை பார்க்க வேண்டும் என நினைப்பவர் தான் அப்பா.

❖ நாம் வேண்டாமலே நமக்கு வேண்டியதைச் செய்யும் கடவுள் "அப்பா"



## ஆவணி 2019 மறைமாவட்ட நிகழ்வுகள்

03.08.2019 சனிக்கிழமை: 12 மணிநேர நற்கருணை ஆராதனை - சீனன்குடாப் பங்கு.
04.08.2019 ஞாயிற்றுக்கிழமை: பொதுக்காலம் 18ம் ஞாயிறு.
: கும்புறுப்பிட்டி புனித பிரான்சிஸ் சவேரியார் வருடாந்தத் திருவிழா.
05.08.2019 செவ்வாய்க்கிழமை : குருக்களுக்கான மாதாந்தத் தியானம்.
09.08.2019 வெள்ளிக்கிழமை : குடும்ப அப்போஸ்தலம் - திருமண முன் ஆயத்தக் கருத்தரங்கு.
10.08.2019 சனிக்கிழமை: குடும்ப அப்போஸ்தலம் - திருமண முன் ஆயத்தக் கருத்தரங்கு.
: மரியாயின் சேனை கியூரியாக் கூட்டம்.
11.08.2019 ஞாயிற்றுக்கிழமை: பொதுக்காலம் 19ம் ஞாயிறு.
: புடவைக்கட்டு புனித செபஸ்தியார் ஆலய வருடாந்தத் திருவிழா.
: அன்புவெளிபுரம் புனித சதாசகாய அன்னை ஆலய வருடாந்தத் திருவிழா.
: இருதயபுரம் திரு இருதய ஆண்டவர் ஆலய வருடாந்தத் திருவிழா.
: கத். இளைஞர் ஒன்றியம் - மறைமாவட்ட பாட்டுப் போட்டி.
14.08.2019 புதன்கிழமை: புனித வின்சன்ட் டி பவுல் ஆலோசனை சபை மாதாந்தக் கூட்டம்.
15.08.2019 வியாழக்கிழமை : பேராலயப் பங்கு ஆரோபண அன்னை ஆலய வருடாந்தத் திருவிழா.
17.08.2019 சனிக்கிழமை: மேய்ப்புப்பணிப் பேரவை நிர்வாகசபைக் கூட்டம்.
18.08.2019 ஞாயிற்றுக்கிழமை: பொதுக்காலம் 20ம் ஞாயிறு.
: சகாயபுரம் புனித சதாசகாய அன்னை ஆலய வருடாந்தத் திருவிழா.
19.08.2019 திங்கள்கிழமை : பீடப்பணியாளருக்கான வினாவிடைப் போட்டி, கலாச்சார நிகழ்வுகள்.
24.08.2019 சனிக்கிழமை: மறையாசிரியர் மாதாந்தக் கருத்தரங்கு.
25.08.2019 ஞாயிற்றுக்கிழமை: பொதுக்காலம் 21ம் ஞாயிறு.
: மறைமாவட்ட 126ம் ஆண்டு நிறைவு.
: பள்ளத்தோட்டம் புனித வேளாங்கண்ணி அன்னை ஆலய வருடாந்தத் திருவிழா.
: கந்தளாவ புனித சதா சகாய அன்னை ஆலய வருடாந்தத் திருவிழா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயேசுவின் சமவெளிப் பொழிவு (லூக் 6:20-49)

மூன்றாம் நற்செய்தியான லூக்கா நற்செய்தி புறவினத்து மக்களுக்கான நற்செய்தி எனச் சிறப்பான அடைமொழியிட்டு அழைக்கப்படுகிறது. இதனையும் கடந்து செல்லும்போது, இந்த நற்செய்தி, அன்றைய சமூகத்திலே ஒதுக்கப்பட்டு, ஓரங்கட்டப்பட்டு, மாண்பிழந்து, மனிதமிழந்து நின்ற ஏழைகள், எளியவர்கள், சமாரியர்கள், புறவினத்தார்கள், பெண்கள், பாவிகள் இவர்களுக்கு முன்னுரிமை தருகின்ற நற்செய்தி எனச் சிறப்பாக அழைக்கப்படுகிறது. இயேசு மனித குலம் முழுவதற்கும் பொதுவானவர். அதிலும் குறிப்பாக பெரும்பான்மையான ஏழை மக்களின் சார்பாக நின்று, அவர்களுக்கு நிறைவான வாழ்வைப் பெற்றுத்தர முனைந்த மாபெரும் மனிதராக இயேசுவைக் காட்ட முனைகிறார் லூக்கா. அவருடைய சொல்லும், செயலும், வாழ்வும், பணியும் இந்த மக்களையே மையங்கொண்டிருந்தன. இதற்குச் சிறப்பான சான்றாக அமைவதே இயேசுவின் சமவெளிப் பொழிவு எனலாம்.

**இடமும் சூழ்நிலையும்**

இயேசுவின் இதே போதனையை மத்தேயு நற்செய்தியாளர் "மலைப் பொழிவு" (5:1) எனவும், மாற்கு நற்செய்தியாளர் "கடலோரப் போதனை" (2:13; 3:7; 4:1) எனவும் தருகின்றனர். ஆனால் லூக்கா இதனைச் "சமவெளிப் பொழிவாகக்" (6:17) காட்டுகிறார்.

யூத மக்களின் நம்பிக்கைப்படி, கடவுளின் சிறப்பான வெளிப்பாடுகளெல்லாம் மலையில்தான் நடைபெற்றுள்ளன. எனவே யூதர்களுக்கு மலை என்பது வெளிப்பாட்டின் அடையாளம். யூதர்களுக்கென்று தனது நற்செய்தியை எழுதிய மத்தேயு யூதப் பின்னணியையும் நம்பிக்கையையும் மையப்படுத்தி, மலை மீதிருந்து போதிப்பவராக இயேசுவைக் காட்டுகிறார்.

ஆனால் புறவினக் கிறிஸ்தவர்களுக்கென்று எழுதிய லூக்கா மத்தேயுவின் பார்வையை மையப்படுத்தத் தேவையில்லை. அவர் இயல்பாக இயேசு சமவெளிப் பகுதியில் போதித்ததாகக் கூறுகிறார். இயேசு தம்மை உயர்ந்தவராகவோ மற்றவர்களிடமிருந்து அப்பாற்பட்டவராக அன்றி சமூகத்தில் அனைவரோடும் குறிப்பாக ஏழைகள், எளியவர்கள், ஒடுக்கப்பட்டோர், உரிமையற்றோர் இவர்களோடு இணைத்துக்கொள்கின்றவராகக் காட்டுவதால், அவர் சமவெளியில் போதிப்பது அவரது சமத்துவ நோக்கையும் சமதளப் பார்வையையும் பொதுமைப் பண்பையும் குறிப்பதாகக் கொள்ளலாம்.

லூக்கா தம் சமவெளிப் பொழிவின் மூலம், நற்செய்தியின் மூலமாகிய "அன்புச் செயலை" வலியுறுத்துகிறார். மத்தேயுவின் "விண்ணரசு" என்பதும் லூக்காவின் "இறையாட்சி" என்பதும் ஒன்றே. ஆனால் லூக்கா "இறையாட்சி" என்பதன் செயலாக்கத்துக்கு அழுத்தம் தருகிறார். எனவேதான் மத்தேயுவின் பார்வையான சட்டங்களையும், யூத நம்பிக்கைகளையும் விடுத்து, பகைவருக்கும் அன்பு, பிறரை மன்னித்தல் மூலம் அன்பெனும் ஒரே சட்டத்தை வலியுறுத்துகிறார்.

**ஏழைகளே இதன் மையம்**

இயேசுவின் வாழ்வில் முன்னுரிமை பெற்றவர்கள் ஏழைகள். இயேசுவின் வாழ்வும், பணியும் இந்த மக்களையே மையம் கொண்டிருந்தது. எனவேதான் இவரின் வாழ்வும் ஓர் ஏழையின் வாழ்வாகவே அமைந்திருந்தது. ஏழையாக மண்ணில் தோன்றிய அவர், தான் வாழ்ந்தபோது ஏழைகளின் கூட்டத்தோடு தன்னை இணைத்துக்கொண்டார். எனவேதான் ஏழைகளின் சார்பாக நிற்கின்ற இறைவனின் மக்கள் இவர்களே என அழைத்து அவர்கள் பேறுபெற்றோர் என்று அழைக்கிறார்.

**யார் இந்த ஏழைகள் (6:20)**

லூக்கா இங்கே குறிப்பிடும் "ஏழைகளை" மத்தேயு ஆன்மீகப்படுத்தி "எளியமனத்தோர்" என்றழைக்கின்றார். ஆனால் இரண்டுமே பழைய ஏற்பாட்டின் "ஏழைகள்" (Anawim) என்ற சொல்லையே குறித்துக்காட்டுகின்றன. (Anavim) என்ற கிரேக்க மூலம், ஆதரிப்போரற்றவர்களை, அனாதைகளை, எளியவர்கள், தங்கள் வெறுமையை உணர்ந்து இறை அருளையே முற்றிலும் சார்ந்து நிற்கின்றவர்களையே குறிக்கிறது. கி.மு. 586இல் எருசலேம் பிடிபட்டபோது "எஞ்சியோர்" ஒன்றுமில்லாதவர்களாய், ஏழைகளுக்கும், பாதுகாப்பு அற்றோருக்கும் அடையாளமாக விளங்கினர். இப்படி கைவிடப்பட்ட, புறக்கணிக்கப்பட்ட, மாண்பிழந்த மக்களையே இயேசு இங்கே ஏழைகள் எனக் குறிப்பிடுகிறார்.

இங்கு குறிப்பிடப்படும் ஏழ்மை ஒருவர் தாமாகவே விரும்பி ஏற்கும் நிலை அன்று. இன்று இருக்கின்ற சமூக, சமய, அரசியல், பொருளாதார, கலாச்சார, பண்பாட்டு சீரழிவுகளாலும், ஏற்றத் தாழ்வுகளினாலும் "ஒரு குழுவினர்" ஏழ்மை நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். எனவேதான் "ஜார்ஜ் சுவாரஸ்" என்ற இறையியலாளர் ஏழைகள் தனி நபர்கள் அல்ல, ஆனால் அவர்கள் ஒரு வர்க்கம் (குழு) என்கிறார். ஆனால் இந்த வர்க்கம் இயற்கையாக எழுவது அல்ல, செயற்கையானது, உண்டாக்கப்படுவது. இந்த மக்கள் தாங்கள் வாழும் சமூகத்தில் கொடுமைகளுக்கும், இகழ்ச்சிகளுக்கும், அவமானத்திற்கும் உள்ளாகி தங்கள் சுயத்தை (Identity), மதிப்பை, பெயரை, பொருளை இழந்து ஆதரிப்போரற்றவர்களாக நிற்கின்றனர். சமூக வளர்ச்சியில் பங்கேற்போ, பொறுப்புகளோ, கூட்டுச் செயல்பாட்டுக்கான வாய்ப்புகளோ இவர்களுக்குத் தரப்படுவதில்லை. இதே சூழ்நிலைதான் அன்றைய இயேசுவின் காலத்திலும் நிலவியது. எனவே ஒடுக்கப்பட்ட, அடக்கப்பட்ட, சுரண்டப்பட்ட, உரிமையற்ற, வாழ்விழந்த மக்களையே இயேசு "ஏழைகளே" என அழைத்தார்.

**ஏழைகளே பேறுபெற்றோர் (6:20-26)**

லூக்காவைப் பொறுத்தமட்டில் அடிப்படையான பேறு ஒன்றே. "ஏழைகளே பேறுபெற்றோர்" என்பதே அது. தங்கள் வாழ்விலே பசியால், பட்டினியால் வாடுவதும், அழுவதும் இவர்கள் வாழ்வின் பல்வேறு பரிமாணங்களாகப் பார்க்கப்படுகின்றன. இத்தகைய ஏழைகளைப் "பேறுபெற்றோர்" என்று அழைத்தபோது, தன் இலட்சியத்தையும் பணியையும் அவர் கூர்மைப்படுத்திக்கொண்டார் என்றே சொல்லவேண்டும். இறையாட்சி இவர்களுக்குரியது என்று சொன்னபோது, அவரின் வாழ்வும் பணியும் இந்த மக்களுக்கே



இலட்சிய அறிக்கையின் (லூக் 4:18-19) உறுதிப்பாடும், தொடர்ந்த நிலைப்பாடும் அதனுடைய வெளிப்பாடுமே என அழைக்கலாம்.

**பசியாக இருப்போர் (6:21)**

இது உண்மையான உடல் பசியைக் குறிக்கிறது. மத்தேயு இதனை நீதியின் மேலான பசி தாகம் என உருவகப்படுத்திப் பொதுமைப்படுத்தும் போது, லூக்கா ஓர் ஏழையின் வாழ்வின் அனுபவமான உண்மையான உடல் பசியைக் குறிப்பிடுகிறார்.

**அழுதுகொண்டிருப்போர் (6:24)**

மத்தேயு "துயருறுவோரே" எனச் சொல்லும்போது, லூக்கா "அழுவோரே" என அழைக்கிறார். ஏழைகள்தான் வாய்விட்டு வெளிப்படையாக அழுவர். எனவே இங்கும் லூக்கா கூறும் பேறுடைமை ஏழைகளையே சார்கிறது.

**சீடர்களின் நிலை (6:22-23)**

தொடக்கக் காலத் திருஅவையில் கிறிஸ்தவர்களுக்கு ஏற்பட்ட நிலையை லூக்கா இயேசுவின் போதனையாகத் தருகிறார். கிறிஸ்துவைப் பின்சென்ற சீடர்கள் வெறுக்கப்பட்டனர்; சமூகத்திலோ புறம்பாக்கப்பட்டனர்; யூத சபைகளினின்று, செபக் கூடங்களினின்று வெளியேற்றப்பட்டனர். அவர்களின் பெயர்கள் பழிப்புக்குள்ளாகி, வேண்டாத நபர்களாகச் சமூகத்திலே ஒதுக்கி வைக்கப்பட்டனர். எனவே இயேசுவின் வழி செல்லும் அனைவருக்கும் இதுதான் பரிசு என நற்செய்தியாளர் கூற முனைகிறார்.

இறையியல் அறிஞர் செபஸ்தியான் காப்பன் போன்றோரின் கருத்துப்படி, இந்தச் சீடர்களும், இயேசுவைப் பின்சென்ற ஏழைகள் கூட்டமும் தங்கள் நிலையை உணர்ந்து, அமைதியாக இருந்துவிடவில்லை; எதார்த்தத்தைக் கண்டு ஊமையாகிவிடவில்லை; உண்மை நிலை கண்டு உறங்கிப்போய் விடவில்லை. ஆனால் அவர்கள் மாற்றுப் பார்வை கொண்டு, அடித்தள மாற்றம் வேண்டி, சமூக நீதி கோரி குரல் கொடுத்தார்கள். எனவேதான் உரோமை அரசுக்கே அது பெரிய அதிர்ச்சியாக, பலத்த அடியாக அமைந்தது. ஆகவே, இந்த ஏழைகளின் குழுவானது ஒதுக்கப்பட்டது; இவர்களின் போர்க்குணம் அமுக்கப்பட்டது. ஏழைகள் சமூகத்தினின்றே புறம்பாக்கப்பட்டனர். இவ்வாறு, இந்தச் சமூகத்தில் கிறிஸ்துவின் மதிப்பீடுகளின்படி வாழ்வதென்பது ஒரு சவால் என்பது இந்தச் சமவெளிப் பொழிவின் மூலம் தெளிவாகிறது.

**"பேறுபெற்றோர்" - புரிந்துகொள்வதெப்படி?**

நம் மரபுச் சிந்தனைப்படி பேறுபெற்றோர் என்றவுடன் அவர்கள் எதிர்காலத்தில் நிறைவான வாழ்வைப் பெறுவர்; விண்ணகத்தில் நிச்சயம் இடம் பெறுவர்; அவர்களுக்கு மறு உலக வாழ்வில் துன்பமே இராது, மகிழ்ச்சியாக இருப்பர் என்று எண்ணி, இருக்கின்ற அநீதியான சூழ்நிலையை நியாயப்படுத்தி விடுகிறோம்.

ஆனால் ஏழைகளே பேறுபெற்றோர் என்று இயேசு சொல்கின்ற போது அதன் அர்த்தம் வேறு. "பேறுபெற்றோர்" என்ற சொல்லானது "மக்காரியோஸ்" என்ற வார்த்தையால் குறிக்கப்படுகிறது. இதன்படி, பேறுபெற்றோர் என்றால் "உங்களைப் பாராட்டுகிறேன்," "நீங்களோ பெருமைக்குரியவர்கள்," "மகிழ்ச்சியாய் இருங்கள்" என்று அர்த்தமாகிறது.

ஏனென்றால் இந்த ஏழைகள்தான் இந்தச் சமூகத்திலே மாபெரும் மாற்றம் கொணரப்போகும் கருவிகள். இவர்களின் போராட்டமும், பணியுமே புதியதோர் உலகைப் (இறையாட்சியைப்) படைக்கப்போகும் முயற்சியாக அமையப்போகிறது. எனவே விடுதலையை, வாழ்வை முன்னெடுக்கும் கடவுளின் செயல்பாடு இவர்கள் வழியாகத்தான் நிகழப்போகிறது. மாற்றத்துக்கான செயல்பாட்டின் கருவிகள் இவர்களே. எனவேதான் இயேசு இவர்களைப் பாராட்டுக்குரியவர்களாக, பெருமைக்குரியவர்களாக, மகிழ்ச்சியடைய வேண்டியவர்களாகப் பார்ப்பதாக இன்றைய இறையியலாளர் அர்த்தம் தருகின்றனர்.

**ஆசியும் சாபங்களும் (6:20-26)**

மத்தேயு 8 பேறுகள் பற்றிக் குறிப்பிடும்போது, லூக்கா 4 பேறுகளை மட்டுமே குறிப்பிடுகிறார். 4 ஆசிகளுக்கு இணையான 4 சாபங்கள் வழங்கப்படுகின்றன.

"ஏழைகளே பேறுபெற்றோர்" எனும்போது, பணக்காரர்களுக்குக் கேடு என்கிறார். "பட்டினியாய் இருப்போர் பேறுபெற்றோர்" எனும்போது உண்டு கொழுத்திருப்போருக்குக் கேடு என்கிறார். "அழுதுகொண்டிருப்பவர்களுக்கு ஆசி" எனக் கூறும்போது சிரிப்பவர்களுக்குக் கேடு என்கிறார். மானிட மகன் பொருட்டு வெறுத்து ஒதுக்கப்படுவோர் பேறுபெற்றோர் எனும்போது, மக்கள் எல்லோரும் புகழும்போது, ஐயோ கேடு என்கிறார். இவ்வாறு ஆசிக்கு மாறான சாபங்கள் இங்கே வழங்கப்படுகின்றன. வாழ்விழந்து தவிக்கும் ஏழை, எளிய மக்களுக்கு ஆசியும், இந்த மக்களை அடக்கி, ஒடுக்கி வாழும் குழுவினருக்குச் சாபமும் இடப்படுகின்றன.

தொடரும்.........

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எகெட் கரித்தாஸ் நிறுவனத்தினரின் தைமாதம் தொடக்கம் பங்குனி மாதம் வரையான செயற்பாடுகள்

சென்ற இதழ் தொடர்ச்சி.....

## சாரதிகளுக்கான பயிற்சிப்பாசறை



UNICEF நிறுவனத்தின் நிதி உதவியுடன் எகெட் கரித்தாஸ் நிறுவனத்தின் ஏற்பாட்டில் 21.03.2019ம் திகதி மூதூர் பிரதேச செயலாளர் கட்டிடத்தில் பஸ் சாரதி, நடத்துனர், முச்சக்கரவண்டி சாரதிகளுக்கான சிறுவர் பாதுகாப்பு, வீதிப்போக்குவரத்து விதிகள் தொடர்பாக விழிப்புணர்வு வழங்கப்பட்டது. இதில் வளவாளராக மூதூர் பொலிஸ் நிலையத்தின் போக்குவரத்து பொறுப்பதிகாரி மற்றும் மூதூர் பிரதேச செயலாளர் செயலகத்தின் சிறுவர் மேம்பாட்டு உத்தியோகத்தர் கலந்து கொண்டனர். இந்நிகழ்விற்கு கிழக்கு மாகாண தேசிய போக்குவரத்து ஆணையத்தின் திருகோண-மலை மாவட்ட உத்தியோகத்தரும் மூதூர் பிரதேச நிலையப் பொறுப்பதிகாரியும் கரித்தாஸ் நிறுவனத்தின் பணிப்பாளரும் மூதூர் பிரதேச செயலாளர் செயலகத்தின் நிர்வாக உத்தியோகத்தரும் கலந்து கொண்டனர். இதில் மொத்தமாக 80 இற்கும் மேற்பட்ட சாரதிகள் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது.

## இந்தியாவிலிருந்து மீள்திரும்பியவர்களுக்கான வாழ்வாதாரம்



உள்நாட்டுப் போரினால் இடம்பெயர்ந்து அகதிகளாக இந்தியா சென்று மீண்டும் இலங்கை திரும்பிய மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதும் முகமாக செடீக் நிறுவனத்தின் பங்களிப்புடன் எகெட் கரித்தாஸ் நிறுவனத்தினரால் அவர்களுக்கான வாழ்வாதாரம் பெற்றுக் கொடுக்கப்பட்டது. பதிவு செய்யப்பட்ட 175 பேருக்குத் தேவையான இலங்கை நாட்டுபிறப்புச் சான்றிதழ், திருமணச் சான்றிதழ் மற்றும் குடியுரிமைச் சான்றிதழ் என்பனவும் பெற்றுக் கொடுக்கப்படுகின்றது.

## தவக்கால முயற்சிகள்



"தீமையை வேரறுத்து நன்மையை விதைப்போம்" எனும் சிந்தனையுடன் 2019ம் ஆண்டிற்கான தவக்காலத்தின் தவமுயற்சிகளில் எகெட் கரித்தாஸ் நிறுவனம் தமது செயற்பாடுகளைச் செய்து வருகின்றது. இத்தவக்காலத்தில் பங்குகளிலிருந்து பங்குமக்களிடமிருந்து பெறப்படும் உதவித் தொகையானது எம் மறைமாவட்டத்திலுள்ள வறிய நிலையில் கல்வி கற்கும் சில மாணவர்களின் கல்விக்காக பயன்படுத்தப்பட்டு வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

## கிளிநொச்சி மக்களுக்கான வெள்ள நிவாரணம்


வட மாகாணத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான பாடசாலை உபகரணங்கள் மற்றும் உலர் உணவுப் பொருட்கள் என்பன எகெட் கரித்தாஸ் நிறுவனத்தின் ஏற்பாட்டில் கடந்த 07.01.2019 அன்று வழங்கி வைக்கப்பட்டது. திருகோணமலை மறைமாவட்டத்திலுள்ள அனைத்து பங்குகளிலிருந்தும் நிவாரணப் பொதிகள் கிடைக்கப் பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

## ஏனைய உதவிகள்



வறிய மக்கள், பெண்கள் தலைமை தாங்கும் குடும்பம், விதவைகள், கைவிடப்பட்டவர்கள் என்போரின் நலன் கருதி அவர்களுக்கான உலர் உணவுப் பொருட்களும், அவர்களின் பிள்ளைகளுக்குத் தேவையான அப்பியாசக் கொப்பிகள், கற்றல் உபகரணங்கள் என்பனவும் எகெட் கரித்தாஸ் நிறுவனத்தினரால் வழங்கி வைக்கப்பட்டன.


## போலந்து நாட்டவர்களால் வழங்கப்படுகின்ற வறிய மாணவர்களுக்கான புலமைப்பரிசில் திட்டம்





போலந்து நாட்டவர்களின் நிதியுதவியுடன் எகெட் கரித்தாஸ் நிறுவனத்தினர் வறிய குடும்பங்களிலுள்ள 25 உயர்தரம் கற்கும் மாணவர்களுக்கும், 12 பல்கலைக்கழகம் மற்றும் கல்வியற் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கும் அவர்களுக்கான கல்வி உதவியினை இன, மத, மொழி வேறுபாடின்றி வழங்கி வருகின்றது.

## தையற்பயிற்சி மற்றும் சமையற்கலைப் பயிற்சி



ACNS நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக யுவதிகளுக்கான வாழ்க்கைத்தரத்தை முன்னேற்றுவதற்காக திருகோணமலை எகெட் கரித்தாஸ் நிறுவனத்திலும், மூதூர் பிரதேச செயலகத்திற்குட்பட்ட சம்பூர் கிராமத்திலும் முறையே தையற்பயிற்சி மற்றும் சமையற்கலைப் பயிற்சி வழங்கப்பட்டதுடன் அவர்களின் ஆக்கங்களும் காட்சிப்படுத்தப்பட்டன. இப்பயிற்சி நெறி மூலம் இவர்கள் அதிக பயனடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## சமூக ஒருங்கிணைப்பும் ஆற்றுப்படுத்தலும் நல்லிணக்கமும் திட்டம் வீதிநாடகம்

எமது சமுதாயத்தில் தற்போது மது, போதைப் பொருள் பாவனையானது மிகவேகமாக இளையோர் மற்றும் மாணவர்களிடையே பரவி வருகின்றது. இவர்களுக்கான விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக வீதி நாடகமொன்றை Civil Security Force இன் உதவியுடன் 04.04.2019 அன்று ஆண்டாங்குளம், பாதிஸ்ஸபுர, மிகிந்தபுர ஆகிய இடங்களில் அரங்கேற்றினர். இதில் எகெட் கரித்தாஸ் நிறுவன பணிப்பாளர் அருட்பணி.டன்ஸ்டன் பெட்ரிக் ஜோசப், பிரதேச சபை உறுப்பினர் திருமதி.சியானி மற்றும் சமயத்தலைவர்கள் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.



தகவல் : எகெட் கரித்தாஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லூக்கா நற்செய்தி அதி 13 - 15 வரை

❖எவரும் பங்கு பற்றலாம்
❖போட்டோப் பிரதிகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
❖போட்டியாளர்கள் சரியாக விடையளித்தால் குலுக்கள் முறையில் பரிசு வழங்கப்படும்.

1ம் பரிசு 500/- 2ம் பரிசு 300/- 3ம் பரிசு 200/-

01. இயேசு ஓய்வு நாளன்று பரிசேயர் வீட்டிற்கு ஏன் சென்றார்? அங்கே காணப்பட்டவர் எந்நோயால் பாதிப்புக்குள்ளாகி இருந்தார்?

...........................................................................................

...........................................................................................

02. மனம் மாறாவிட்டால் அழிவீர்கள் என இயேசு கூறிய உதாரணம் யாது?

...........................................................................................

...........................................................................................

03. இறையாட்சி எதற்கு ஒப்பிடப்படுகிறது?

...........................................................................................

04. இயேசு பாவிகளோடு உணவருந்தியதை பிழையெனக் கூறிய பரிசேயர், மறைநூல் அறிஞரைப் பார்த்து இயேசு கூறிய உவமைகள் யாவை?

...........................................................................................

...........................................................................................

05. தீயஆவி பிடித்த உடல்நலம் குன்றி கூன் விழுந்த பெண்ணைப் பார்த்து இயேசு கூறியது என்ன?

...........................................................................................

06. கோடிட்ட இடங்களை நிரப்பி வாக்கியத்தைப் பூர்த்தி செய்க.
தம்மைத் தாமே உயர்த்துவோர் யாவரும் ............................ தம்மைத் தாமே தாழ்த்துவோர்க்கு ............................

7. "இவர் பாவிகளை வரவேற்று அவர்களோடு உணவருந்துகிறாரே" என்று கூறியவர்கள் யார்?

...........................................................................................

...........................................................................................

8. ஒருவர் விருந்துக்கு அழைக்கும் பட்சத்தில் கடைசி இடத்தில் சென்று அமரும்போது அதனால் கிடைக்கும் நன்மை என்ன?

...........................................................................................

...........................................................................................

9. "ஆண்டவரே. மீட்புப் பெறுவோர் சிலர் மட்டும் தானா?" என ஒருவர் வந்து இயேசுவிடம் கேட்ட போது அவர் கூறிய பதில் என்ன?

...........................................................................................

...........................................................................................

10. இயேசு ஓய்வுநாளன்று தொழுகைக் கூடத்தில் கற்பித்துக் கொண்டிருக்கும் போது அங்கு யாரைக் கண்டார்?

...........................................................................................

...........................................................................................

11. "காணாமற்போன ஆடு" பற்றிய உவமையில் இருந்து பெற்றுக் கொள்ளும் செய்தி யாது?

...........................................................................................

...........................................................................................

...........................................................................................

12. இயேசு ஓய்வுநாளில் குணமாக்கியதைக் கண்டு கோபமடைந்த தொழுகைக்கூடத் தலைவர், மக்கள் கூட்டத்தினரைப் பார்த்துக் கூறியது என்ன?

...........................................................................................

...........................................................................................

...........................................................................................

13. "எருசலேமே. எருசலேமே இறைவாக்கினரைக் கொல்லும் நகரே, உன்னிடம் அனுப்பப்பட்டோரை கல்லால் எறிகிறாயே!" இக்கூற்றைக் கூறியது யார்? எச்சந்தர்ப்பத்தில்?

...........................................................................................

14. "கேட்கச் செவியுள்ளோர் கேட்கட்டும்" என்பதற்கு இயேசு கூறிய உதாரணம் எது?

...........................................................................................

15. ஓய்வுநாளில் குணப்படுத்துவது முறையா. இல்லையா? என்று இயேசு யாரைப் பார்த்துக் கேட்டார்?

...........................................................................................

பெயர் : ...........................................................................

பங்கு : ...........................................................................

முகவரி: ...........................................................................

...........................................................................

முடிவுத்திகதி : 05. 08. 2019

# காலத்தைக் கணிப்போமே

அருட்பணி. N.C. அருள்வரதன்

**இதோ கவிதை வரிகள் ..........**
**சரியாக வடிவமையுங்கள்**

❖ அறச்செயல்களை வாழ்வாக்கியே
❖ காலத்தை உணர்வோம் வாழ்வினிலே
❖ கடினங்களைப் புறந்தள்ளுவோமே
❖ "அன்பே" நமக்கு வேண்டியதாய்
❖ அதையே நாமும் செய்வோமே
❖ பிறரின் துன்ப வேதனைகளை
❖ நாம் பெறுவோம் உண்மையே
❖ நிறைவான ஆசீரை
❖ நாமே செயற்படும் போது தான்
❖ நமதென நாமே உணர்ந்து கொண்டே

பத்து வரிக்கவிதைகள
மாற்றத்தைக் கண்டு சரியாக வடிவமையுங்கள்
எல்லோரும் சரியாக வடிவமைத்தால்
குலுக்கல் மூலம் தெரிவு இடம்பெறும்

1ம் இடம் 500/-
2ம் இடம் 300/-
3ம் இடம் 200/-

முடிவுத்திகதி 05.08.2019

# மறைக்கல்வி கற்போம்

01. அருளடையாளக் கொண்டாட்டம் நான்கு பகுதிகளைக் கொண்டது அவை எவை?
தொடக்க வழிபாடு, இறைவாக்கு வழிபாடு, அருளடையாளக் கொண்டாட்டம், சடங்கின் முடிவு

02. திருப்பலியின் நான்கு கொண்டாட்டங்களும் எவை?
தொடக்க சடங்கு, இறைவாக்கு வழிபாடு, நற்கருணை வழிபாடு, முடிவுச் சடங்கு

03. திருப்பலினிள் 03 பவனிகள் எவை?
வருகைப்பவனி, காணிக்கைப் பவனி, நற்கருணைப்பவனி

04. திருப்பலியில் கிறிஸ்துவின் உடனிருப்பு எங்கெல்லாம் விளங்குகிறது?
நான்கு நிலைகளில்
நற்கருணையில், இறைவார்த்தையில்,
இறைமக்களில், அருள்பணியாளரில்

05. திருப்பலியில் எத்தனை சடங்குகள் உள்ளன?
04
தொடக்கச் சடங்கு, வார்த்தை வழிபாட்டுச் சடங்கு,
நற்கருணைச் சடங்கு, முடிவுச் சடங்கு

06. குருப்பட்டத்தின் போது ஆயர் புதிய குருவை எந்த திரு எண்ணெயால் திருநிலைப்படுத்துவார்?
கிறிஸ்மா

07. திருமணத்தின் பண்புகள் எவை?
ஒருமைப்பண்பு, முறிவுபடாத் தன்மை

08. குருத்தவப் பணியின் நிலைகள் எத்தனை?
திருத்தொண்டர்
குரு
ஆயர்

09. உண்மை பேசுவதால் ஏற்படும் நன்மைகள்?
மகிழ்ச்சி, அமைதி, நல்மதிப்பு, நம்பிக்கை, உயர்வு

10. பிறருடைய உடலைக் காக்கும் செயல்கள்?
உணவு கொடுத்தல்
தாகமாய் இருப்பவருக்கு நீர் கொடுத்தல்
ஆடை கொடுத்தல்
அகதிகளுக்கு வதிவிடம் கொடுத்தல்
சிறையில் இருப்பவர்களை காணச் செல்லல்
நோயாளரை சந்தித்தல்
இறந்தவர்களை அடக்கம் செய்தல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹாய் குட்டீஸ்

## திருவிவிலிய புதிர் போட்டி எண் : 37

## எஸ்ரா 1-5 அதிகாரங்களின் விடைகள்

1. சைரசு (05:13)
2. தனது தெய்வங்களின் கோவிலில் (01:07)
3. அரமேய மொழியினால் (04:07)
4. நபுக்கோதனசார் (02:01)
5. காலையிலும் மாலையிலும் (03:03)
6. பாரசீக மன்னன் சைரசு (01:02)
7. ஆகாபும். செக்கரியாவும் (05:01)
8. இரண்டாம் (04:24)
9. ஏழாம் மாதத்தில் (03:01)
10. நெபுகத்னேசர் (05:12)



**பங்குபற்றியவர்கள் : 47 பேர்**
**மிகச்சரியாக விடையளித்தோர் : 31பேர்**

### பரிசுக்குரியவர்கள்

01ம் பரிசு 500/-
செ. தனுசிஹா
மாங்காயூற்று,
கன்னியா

02ம் பரிசு 300/-
திரேசா சேவியர்
இல 37/3,
வித்தியாலயம் வீதி,
திருகோணமலை

3ம் பரிசு 200/-
நிரோஷன் நிரோன்
6ம் வட்டாரம்,
சாம்பல்தீவு

### பாராட்டுக்குரியவர்கள்

1.சு. கௌசல்யா - பாலையூற்று
2.எம். டெய்சிராணி - கன்னியா
3.எப். ஆன் பிரசில்டா - இலிங்கநகர்
4.வி. சொய்ஸ் கிளிண்டன் - நிலாவெளி
5.எம். ரோஸ்மலர் - கன்னியா
6.ஏ. கே. தர்ஷிமேரி - பேராலயம்
7.எஸ். டிஹஷிஹா - கன்னியா
8.சு. சுவேக்கா - பாலையூற்று
9.எஸ். நிவேதிக்கா - கன்னியா
10. ச. சாரோன் டொமினிக்கஸ் - நிலாவெளி
11. எ. கேமியன் கிலிற்றஸ் - நிலாவெளி
12. ஸொறன்சி றன்சியா ஜொனத்தன் - இலுப்பைக்குளம்
13. வில்பிரட் ஹாட்ஸ் மேரி - யாழ்ப்பாணம்
14. ரா. டிலக்ஷனா - கன்னியா
15. ஜெ. அபிஷா - பள்ளத்தோட்டம்
16. ஏ. ஷாம்போல் - பாலையூற்று
17. ஜே. ஆஷா - பள்ளத்தோட்டம்
18. செல்வி. பி. கொன்சலா - உவர்மலை
19. எப். ஆர். பிராங்ளின் - குவாடலூப்பே
20. மை. யுவான் ஜெரமி - உவர்மலை
21. ம. க.ஃபினா - உவர்மலை
22. எஸ். ஆரான் - குவாடலூப்பே
23. வெ. ஆன்டிலக்ஷிக்கா - கும்புறுப்பிட்டி
24. அ. சபாணா - நெடுந்தீவு
25. எ. எமில்ரன் - பள்ளத்தோட்டம்
26. நோ. மேரிரஜனட் - பேராலயம்
27. எவாஞ்சலின் - பேராலயம்
28. தே. சுமில்டன் - நிலாவெளி

**பங்குபற்றிய அனைவருக்கும்**
**வாழ்த்துக்களும், நன்றிகளும்.**

# கவிதை வரிகளை சரியாக வடிவமைத்தல் போட்டி

## மனித மாண்புகள்

சரியான கவிதை வரிகள்



பகைமைகளும் பேதங்களும்
மறைந்தே வாழ்வோடு என்றும்
உறவுகளே உதயமாக வேண்டும்
உட்பகையும் குரோதங்கள்
உறவுகளைக் கலைத்துவிடும்
அன்பும் அறநெறி வாழ்வுகளே நம்
உறவுகள் வளரத் துணைபுரியுமே
என்னதான் வெறுப்புகள் வந்தாலுமதை
மன்னித்து ஏற்று வாழ்வதே

**பங்குபற்றியவர்கள் : 24 பேர்**
**மிகச் சரியாக வடிவமைத்தவர்கள் : 10 பேர்**

பரிசுக்குரியவர்கள்

1ம் பரிசு 500/-
ஸ்ரெலா ஜெரோம்
6ம் வட்டாரம்
சாம்பல்தீவு

2ம் பரிசு 300/-
நோ. மேரி ரஜனட்
66A, யாட் அடைவீதி,
திருகோணமலை

3ம் பரிசு 200/-
யூ. அனஸ்டயானா
4ம் ஒழுங்கை,
பெரியகுளம்,
சாம்பல்தீவு

# சிறுவர்களுக்கான நிறம் தீட்டுதல் போட்டி முடிவுகள்

## குருத்தோலை ஞாயிறு

**பங்குபற்றியவர்கள் : 33 சிறுவர்கள்**

பரிசுக்குரியவர்கள்



1ம் பரிசு 500/=
கே. மேர்ஜிஷா
5ம் வட்டாரம்.
கும்புறுப்பிட்டி

2ம் பரிசு 300/=
ஏ. கெ. ஜீஜினா
இல : 66,
யாட் அடைவீதி.
திருகோணமலை

3ம் பரிசு 200/=
எஸ். சஹானா
இல 10/4,
கண்ணகிபுரம்.
உவர்மலை.

# சிறுவர்களுக்கான நிறம் தீட்டுதல் போட்டி

## புனித லூக்கா

- பாலர் முதல் தரம் 5 வரையுள்ள மறைக்கல்வி மாணவர்களுக்கு.
- திருமலைத்தீபத்தில் தரப்படும் படத்திற்கு நிறம் தீட்டுதல் வேண்டும். போட்டோ பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
- 1, 2, 3ம் இடங்களைப் பெறுபவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும்

1ம் பரிசு - 500/= 2ம் பரிசு - 300/= 3ம் பரிசு - 200/=



பெயர் ..................................................

முகவரி ..................................................

பங்கு ..................................................

தரம் ..................................................

முடிவுத் திகதி 05.08.2019

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ம் நாள் நினைவஞ்சலி

மண்ணீர்ப்பு 1965 05 23



விண்ணீர்ப்பு 2019 05 05

## அமரர் யேசுதாசன் விறிசிற்றம்மா (ரூபி)

உதிராத மலர் இல்லை
உலராத பனி இல்லை
புதிரான வாழ்க்கை இதில்
புதையாத பொருள் இல்லை
அல்லும் பகலும் உறங்கா விழிகள்
இன்பம் துன்பம் தாங்கும் வேர்கள்
சொல்ல முடியாது அவள் மகிமை
சொல்லி முடியாது அவள் பெருமை
எங்கே வாழ்க்கை தொடங்கும்
அது எங்கே எவ்விதம் முடியும்
இது தான் பாதை இது தான் பயணம்
என்பது யாருக்கும் தெரியாது இருந்தும்
இம் மண்ணை விட்டு நீங்கள் பிரிந்து
சென்றாலும் எம் நெஞ்சங்களிலே
இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கும்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை பிரார்த்திக்கின்றோம்.........

தகவல் - குடும்பத்தினர்
இல - 145, 3ம் ஒழுங்கை, ஆனந்தபுரி.



# கொச்சிக்கடை புனித அந்தோனியார் திருத்தலம் திறப்பு

இலங்கையில் கொழும்பு நகரில், உயிர்ப்புப் பெருவிழாவன்று பயங்கரவாதத்தால் தாக்கப்பட்ட கொச்சிக்கடை புனித அந்தோனியார் திருத்தலம். ஜுன் 12, புதன்கிழமை மாலையில் அர்ச்சிக்கப்பட்டு, பொதுமக்களுக்கு மீண்டும் திறக்கப்பட்டுள்ளது.

அந்தோனியார் விழாவான ஜுன் 13, வியாழன் காலையில் விழாத்திருப்பலியும் நிறைவேற்றப்பட்டள்ளது. இவ்விரு நிகழ்வுகளையும் தலைமையேற்று நிகழ்த்திய கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் அவர்கள், இந்தப் பயங்கரவாதத் தாக்குதல்களுக்குப் பலியானவர்கள் எல்லாரும் புனிதர்கள் என்றும் அவர்களையும் அவர்களின் உறவுகளையும் ஒவ்வொரு நாளும் நாம் நினைவு கூருவோம் என்றும் கூறினார்.

**ஆதாரம் : வத்திக்கான் வானொலி**

# வருங்காலம் குறித்த நம்பிக்கையை மக்களுக்கு வழங்க...



உணவுப் பாதுகாப்பின்மைக்கும், மனிதனின் குடி பெயர்தலுக்கும் காரணமான வறட்சி என்ற பிரச்சனை பல காலமாக தொடர்ந்து வருவது குறித்த ஆழமாக விவாதிக்க வேண்டிய நேரமிது என அழைப்பு விடுத்தார். FAO எனும் உலக உணவு மற்றும் வேளாண்மை நிறுவனத்தின் கூட்டங்களில் திருப்பீடத்தின் சார்பில் பங்கேற்கும் பிரதிநிதி.

பூமி பாலைவனமாதலையும் வறட்சியையும் எதிர்த்து போராட்டம் உலக நாளையொட்டி FAO நிறுவனத்தில் "வறட்சியும் வேளாண்மையும்" என்ற தலைப்பில் இடம்பெற்றக் கூட்டத்தில் உரையாற்றிய திருப்பீடப்பிரதிநிதி. அருள்பணி. பெர்னான்டோ கிகா அரெயானோ அவர்கள், அருள்பணி. பெர்னான்டோ கிகா அரெயானோ அவர்கள், வறட்சியின் காரணமாக மக்கள் குடிபெயர்ந்து வருவது தொடரும் நிலையில் இவற்றை மாற்றியமைக்க ஒவ்வொருவரும் தங்களால் ஆன முயற்சிகளை தொடங்க வேண்டுமென கேட்டுக் கொண்டார்.

**ஆதாரம் : வத்திக்கான் வானொலி**

# திருப்பீடத்தின் பிரதிநிதிகள் வத்திக்கானில் சந்திப்பு



திருத்தந்தையின் பிரதிநிதிகளாக உலகெங்கும் பணியாற்றுவோரின் சந்திப்பு ஜுன் 12 புதன் முதல் 15 சனிக்கிழமை வரை வத்திக்கானில் நடைபெற்றது என்று வத்திக்கான் செய்தித்துறை தலைவர் அலெச்சாந்ரோ ஜிசோத்தி அவர்கள் அறிவித்தார். மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் இக்கூட்டத்தினை திருப்பீடச் செயலாளரின் அலுவலகம் ஏற்பாடு செய்திருந்தது எனவும் இக்கூட்டத்தில் பல்வேறு நாடுகளில் பணியாற்றும் 98 திருப்பீடத்தூதர்களும் உலக அவைகளில் திருப்பீடத்தின் பிரதிநிதிகளாக பணியாற்றும் ஐந்து தூதர்களும் பங்கேற்றனர் என்றும் ஜிசோத்தி அவர்கள் கூறினார்.

**ஆதாரம் : வத்திக்கான் வானொலி**

# Congratulations



மறைமாவட்ட பாதுகாவலர் தினம்
இயேசுசபை குருக்களின் விழா
31. 07. 2019
செபிப்போம் வாழ்த்துவோம்

# 2019ம் ஆண்டில் சென்று வந்த புனித பூமிக்கான திருப்பயணம்





2019ம் ஆண்டு திருகோணமலை மறைமாவட்டம் உட்பட இலங்கையின் வேறுபல மறைமாவட்டங்களைச் சேர்ந்த கிறிஸ்தவ மக்கள் 40 பேரைக்கொண்ட குழு அருட்பணி றொஹான் பேணாட் அடிகளாரின் வழிகாட்டலின் தலைமையில் கடந்த 07.04.2019ம் திகதி இலங்கையிலிருந்து புனித பூமியை நோக்கிப்பயணம் மேற்கொண்டது. கடந்த மூன்று வருடங்களில் அருட்பணி றொஹான் பேணாட் வழிநடத்திச் சென்ற மூன்றாவது குழு இதுவாகும்.

இப்பயணத்தின் போது, மக்கள் இயேசுவின் பிறப்பு முதல் விண்ணேற்பு வரை நடந்த உண்மை நிகழ்ச்சிகளை விவிலியத்தின் ஊடாக அறிந்த செய்திகளை உணர்வுபூர்வமாக, நேரடியாக அறிந்தும் உணர்ந்தும் கொள்வதில் பெறும் ஆசைகளுடனும் உற்சாகத்துடனும் பங்குபற்றினர்.

இப்பயணத்தில் இடைமட்ட வயது தொடக்கம் மூத்தவயது உடையோர் வரை கலந்து கொண்டனர். இவர்களில் பலர் முதுமை, இயலாமை மற்றும் உபாதைகளினால் பாதிக்கப்பட்டிருப்பினும் கடவுளின் மீது கொண்ட நம்பிக்கையின் நிமிர்த்தம் யாதேனும் தடைகள் இன்றி விசுவாசத்தின் சாட்சிகளாக முழு ஈடுபாடுடனும் செயற்பட்டனர்.

இற்றைக்கு 2019ம் ஆண்டுகளிற்கு முன்னர் நடந்தேறிய வரலாற்று உண்மைச் சம்பவத்தின் உச்ச நிகழ்வான இயேசுவின் கல்வாரிப் பயணத்தை மீண்டும் ஒருமுறை நினைவுகூறும் படியாக, எமது இப்பயணத்தில் நாம் மேற்கொண்ட சிலுவைபாதைத் தியானம் எமக்கு அளப்பரிய ஒரு வரப்பிரசாதமாக அமைந்தது.

மெய்சிலிர்க்கவைத்த இன்னுமொரு நிகழ்வாக யோர்தான் நதிக்கரையில் இயேசு திருமுழுக்கு பெற்றுக்கொண்ட அதே இடத்தில் நாமும் இன்னுமொரு முறை எமது திருமுழுக்கு வாக்குறுதிகளை புதுப்பித்து அருட்பணி றொஹானிடம் திருமுழுக்குப் பெற்றுக் கொண்டமையாகும்.

மேலும், இயேசு செய்த முதற் புதுமை - அதாவது கானாவூர் திருமண விழாவில் இரசம் தீர்ந்துபோன வேளையில் இயேசு தண்ணீரை இரசமாக மாற்றினார் இதை நினைவு கூறும் முகமாக கானான் தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுத்தோம். கணவன் மனைவியாக இப்பயணத்தில் கலந்து கொண்டவர்கள் தமது திருமண வாக்குறுதிகளை புதுப்பிக்கும் அருட்சாதன நிகழ்வும் நடைபெற்றது. இது எம்மவர்க்கு ஒரு வியக்கத்தக்க விடயமாக இருந்தது.

மற்றும் கலிலேயாக்கடல், சாக்கடல், ஜெரிக்கோ, தபோர்மலை, பெத்தலகேம், ஜெருசலேம் உட்பட பல இடங்களில் பெற்றுக்கொண்ட உணர்வுகளை எம்மால் வார்த்தைகளால் விபரிக்க முடியாதவையாகும்.

விசேடமாக ஆறு நாட்கள் கொண்ட இத்திருப்பயணமானது இறைவன் அருளால் எந்த ஒரு இடையூறுகளோ, தடைகளோ, தாமதங்களோ இல்லாமல் மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

இப்பேற்பட்ட மாபெரும் சந்தர்ப்பத்தை வழங்கிய எல்லாம் வல்ல இறைவனுக்கும், இப்பயணத்தை நெறிப்படுத்திய அருட்பணி றொஹான் பேர்ணாட் அவர்களுக்கும், சுப்பர் லிங்க் நிறுவனத்திற்கும், இஸ்ராயேல், ஜோர்தான் நாடுகளில் எம்மை வழிநடத்திய வழிகாட்டிகளுக்கும், ஊழியர்களுக்கும் பயணிகள் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வது எமது தலையாய கடமையாகும்.

திருப்பயணிகள் சார்பில்.
**திருமதி. ஜொய்சி ராஜசேகரம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org